Registered as a news paper.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTER NET
BROWSING CENTRE
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
இலங்கை முழுவதும் 24 மணிநேரத்தில்
துரித தபால்/பொதிகள் சேவை.
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
303, K.K.S. Road, Jaffna. T.P. 021-2222670, 2223588
Fax - 2223214, Email-del - smskr@eureka.lk
(தி-1037)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆனி 02 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ர.ஆகிர் 15 (17.06.2003) செவ்வாய்க்கிழமை இதழ்: 257

## நேரடித் தாக்குதல்களைத் தவிர சகல வழிகளிலும் ஒத்துழைப்பு!

### இந்தியக் கடற்படை உதவி பற்றி டிக்ஸிற்



(கொழும்பு)

இலங்கைக் கடற்படையுடன், இந்தியக் கடற்படை கடந்த 1992 ஆம் ஆண்டுமுதலே - பரஸ்பரம் ஒத்துழைத்துச் செயற்பட்டு வருகிறது. நேரடியாகத் தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர, வேறு எல்லாவிதமான அனைத்து ஒத்துழைப்புக்களையும் - இந்தியக் கடற்படை இலங்கைக் கடற்படைக்கு வழங்கிவருகிறது.

- இவ்வாறு இலங்கைக்கான இந்தியாவின் முன்னாள் தூதுவர், ஜே.என்.டிக்ஸிற் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் கப்பல் தாக்கப்பட்டதுடன், இந்தியத் தரப்பு சம்பந்தப்பட்டதா என்பது பற்றிக் (10 ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்கால அமைப்புத் தொடர்பாக புலிகளுக்கு புதிய பிரேரணைகள்!

### அனுப்பி வைப்போம் என்கிறார் பீரிஸ்

(கொழும்பு)

சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்காக, வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இடைக்கால அமைப்பை ஏற்படுத்துவது தொடர்பாக, புதிய பிரேரணைகளை அரசு விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பிக்கவிருப்பதாக அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் பேசும்போதே - அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசும்போது -

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அபிப்பிராயத்தைப் பெற்றுக்கொண்ட பின்னர் மட்டுமே, இடைக்கால (10 ஆம் பக்கம் பார்க்க)



# புலிகளின் அலுவலகத்தை சோதனையிட சுழிபுரத்தில் பெருமெடுப்பில் சுற்றிவளைப்பு!

## நூற்றுக்கணக்கில் படையினர் குவிந்தனர்

(சுழிபுரம்)

**சுழிபுரம் பகுதியில் - நூற்றுக்கணக்கான இராணுவத்தினரும், பொலிஸாரும் இணைந்து பெருமெடுப்பிலான சுற்றிவளைப்பு மற்றும் தேடுதல் நடவடிக்கையொன்றினை நேற்று மேற்கொண்டனர்.**

**இதன்போது, விடுதலைப் புலிகளின் அலுவலகம் ஒன்றைச் சோதனையிடப் படையினர் பலவந்தமாக முயன்றபோது - விடுதலைப் புலிகள் அதனை அனுமதிக்கவில்லை. பின்னர், கண்காணிப்புக்குழுவினர் அழைக்கப்பட்டு, அவர்கள் முன்னிலையில் பொலிஸாரால் சோதனை நடத்தப்பட்டது.**

நேற்று அதிகாலை வேளையில்- சுழிபுரம் சந்தி மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் - ஆயுதம் தாங்கிய விசேட இராணுவத்தினர் நூற்றுக்கணக்கில் குவிக்கப்பட்டிருந்தனர்.

காலை 5.30 மணியளவில் ஆரம்பிக்கப்பட்ட இப்பாரிய நடவடிக்கையில், நூற்றுக்கணக்கான படையினர் ஈடுபட்டிருந்தனர்.

அத்துடன், விசேட மோட்டார் சைக்கிள் இராணுவ அணியும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டது.

சுழிபுரம் பிரதான வீதி, நெல்லியான் வீதி மற்றும் அப்பகுதியில் உள்ள ஏனைய சிறு ஒழுங்கைகளிலும் இராணுவத்தினர் நிறுத்தப்பட்டு - அப்பகுதி முழுமையாகச் சுற்றிவளைக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு சுற்றிவளைக்கப்பட்ட பின்னர் நெல்லியான் வீதியிலுள்ள (10 ஆம் பக்கம் பார்க்க)

## தப்பிச் சென்ற சிறிய கப்பலைத் தேடி கடற்படை, விமானப்படை தேடுதல்!

(கொழும்பு)

கிழக்குக் கடற்பரப்பில் வைத்து, மூழ்கடிக்கப்பட்ட புலிகளின் கப்பலுடன் காணப்பட்ட சிறிய கப்பலைத் தேடி - கடற்படையினரும், விமானப் படையினரும் தொடர்ந்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருப்பதாகப் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

கடற்படையின் படகுகளும், விமானப் படையின் விமானங்களும் இந்தத் தேடுதலில் ஈடுபட்டு வருகின்றன. அத்துடன், இந்தியக் கடற்படையின் படகுகள் தமது கடற்பகுதிக்குள் தேடுதல் வேட்டையை மேற்கொண்டுள்ளன.

இதேவேளை, கடற்படை உயரதிகாரி ஒருவர் தகவல் தருகையில்- புலிகளின் கப்பல் மீதான தாக்குதலில் (10 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பலை அழித்த படையினர் மாரப்பன இரகசிய சந்திப்பு!

### திருமலையில் நேற்றுக்காலை நடந்தது

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் கப்பலை தாக்கி மூழ்கடித்த நடவடிக்கையில் பங்குபற்றிய கடற்படை அதிகாரிகளுடன், பாதுகாப்பு அமைச்சர் இரகசியச் சந்திப்பொன்றை நடத்தியுள்ளார்.

நேற்றுக்காலை திருகோணமலையில் உள்ள கடற்படைத்தளத்தில் இந்த இரகசியச் சந்திப்பு நடைபெற்றது. மேற்படி தாக்குதலில் பங்குபற்றிய கடற்படை அதிகாரிகளும், கடற்படைச் சிப்பாய்களும் தனியான இடம் ஒன்றுக்கு அழைக்கப்பட்டு அமைச்சருடனான (10 ஆம் பக்கம் பார்க்க)

## நயினை பக்தர்களுக்கும் விசேட பாஸ்!

நயினாதீவு, நாகபூஷணி அம்மன் ஆலய உற்சவத்தில் கலந்து கொள்ளும் பக்தர்களுக்கு, விசேட பாஸ் வழங்கும் நடைமுறை தொடர்ந்தும் அமுலில் இருக்குமென்றும், பக்தர்களைச் சோதிப்பதற்காக குறிகாட்டுவானிலும், அல்லைப்பிட்டியிலும் விசேட சோதனைச் சாவடிகள் அமைக்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று யாழ்.செயலகத்தில் நடை (10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



அம்மனைப் பார்க்கவும் அனுமதிச் சீட்டெண்டால் அடுக்காது கண்டியளே....

## இராணுவத்தின் சோதனைகள் பதற்றத்தைத்தான் அதிகரிக்கும்!

### படையதிகாரிகளிடம் தளபதி ரமேஷ் தெரிவிப்பு



நேற்றைய சந்திப்பில் - இராணுவ, புலிகள், கண்காணிப்புக்குழுத் தரப்பினர்.

மட்டு - அம்பாறை மாவட்டத்தில் இராணுவத்தினர் சோதனைகளை அதிகரித்துள்ளமை, மக்கள் மத்தியில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் - இந்த நடவடிக்கை மக்களிடையே எதிர்ப்புணர்வைத்தான் மேலோங்கச் செய்யும். இதனைப் படையதிகாரிகளுக்கும் எடுத்துக் கூறியுள்ளோம் என மட்டு - அம்பாறை சிறப்புத் தளபதி த.ரமேஷ் தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நேற்று வவுணதீவு பிரதேச செயலகத்தில் நடைபெற்ற சந்திப்பின் பின்னர் செய்தியாளரிடம் பேசும்போது, அவர் இதனைத் தெரிவித்தார்.

மட்டக்களப்பு போர்நிறுத்த கண்காணிப்புக் (10 ஆம் பக்கம் பார்க்க)

## நகரின் கரையோரப் பகுதிகளில் நேற்றும் தொடர்ந்து மோதல்!

### பலர் காயம்; வீடுகளுக்கும் சேதம்

யாழ்.நகரக் கரையோரப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு ஆரம்பித்த கோஷ்டி மோதல், நேற்றுப் பகலும் நீடித்தது. இம்மோதல்கள் காரணமாக பலர் காயமடைந்தனர். பல வீடுகள் சேதமாக்கப்பட்டன.

பாஷையூர் அந்தோனியார் ஆலய உற்சவத்தையொட்டி நேற்றுமுன்தினம் நள்ளிரவு நடைபெற்ற இசைநிகழ்வில், ஒரு சிலர் எழுந்து நடனமாடினர். அப்போது அவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இதனையடுத்து - அப்பகுதிக்கு வந்த நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் பதில் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து கோஷ்டி மோதல் வெடித்தது. (10 ஆம் பக்கம் பார்க்க)

# நிரந்தர நியமனம் பெற்றுள்ள தொண்டராசிரியர்கள் விவரம்

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் யாழ்.மாவட்டத்தில் நியமிக்கப்பட்ட தொண்டராசிரியர்களின் பெயர் விபரங்கள் வெளியாகியுள்ளன.

வலய ரீதியாக இவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு-

**யாழ்.கல்வி வலயம்**

ஜே.ஏ.செல்வராணி (இருபாலை றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை), ஜி.வசந்தமாலினி (கோப்பாய் நாவலர் மகா வித்தியாலயம்), ஜ.சிவபவானி (பூம்புகார் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), எஸ்.ராதிகா (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), கே.கஸ்தூரி (ஊரெழு கணேசா வித்தியாலயம்), பி.சுதர்சினி (கொக்குவில் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை), ரி.புவனேந்திரன் (ஊரெழு கணேசா வித்தியாலயம்), ஆர்.கலாராணி (டொன் பொஸ்கோ வித்தியாலயம்), கே.தயாநிதி (இருபாலை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை).

ரி.விஜிதா (வண்ணார்பண்ணை நாவலர் மகா வித்தியாலயம்), ஏ.ஜே.சுரேசினி (அரியாலை சிறி பார்வதி வித்தியாலயம்), ஏ.யாழினி (யாழ்.கன்னியர்மடம் மகா வித்தியாலயம்), எம்.அன்ரனற் லக்ஷி (யாழ். கன்னியர்மடம் வித்தியாலயம்), பி.பரஞ்சோதி (புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி), ஐ.அம்பிகாதேவி (புனித திரேசா மகளிர் கல்லூரி), கே.சத்தியபாமா (வாதரவத்தை விக்கினேஸ்வர வித்தியாலயம்), ஆர்.இதிராக்கரசி (வாதரவத்தை விக்கினேஸ்வர வித்தியாலயம்), சிறிரதி (வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயம்).

ரி.ஜெயதர்சினி (கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம்), எம்.யோகராணி (புத்தகலட்டி ஸ்ரீவிஷ்ணு வித்தியாலயம்), வி.சுதாஜினி (கோப்பாய் நாவலர் வித்தியாலயம்), எஸ்.சுகந்தினி (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), எம்.வெல்சியா கோமதி (புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), எஸ்.அனற் மரிடர் (புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), எஸ்.வனஜா (நவக்கிரி அமெரிக்க மிஷன் தமிழ் கலவன் பாடசாலை), கே.விஜயகுமாரி (திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயம்), வை.விஜிதா (நல்லூர் தெற்கு ஸ்ரீவிக்னேஸ்வரா வித்தியாலயம்).

வி.நிசாந்தினி (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), எஸ்.சுஜவா (நாயனமார்க்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம்), ஆர்.ஜெயராஜினி (நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்).

என்.மாலினி (நீர்வேலி றோமன் கத்தோலிக்க தமிழ்கலவன் பாடசாலை), ரி.சுயந்தினி (கலட்டி மெதடிஸ்த மிசன் தமிழ்கலவன் பாடசாலை), பி.சிலேகா (திருக்குடும்ப கன்னியர்மடம்), ஏ.றொபின்சன் (பாஷையூர், புனித அன்ரனி றோமன் கத்தோலிக்க பாடசாலை), டி.பிரியந்தி மரினா (திருக்குடும்ப கன்னியர்மடம்), கே.செல்வகுமார் (பெரியபுலம் மகா வித்தியாலயம்), ஜே.மேரிஸ்ரெலா (திருக்குடும்ப கன்னியர்மடம்), ஆர்.ராகினி (கொக்குவில் சிறி இராம கிருஷ்ண வித்தியாலயம்) பி.கம்சலா (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை)

**வலிகாமம் வலயம்**

ரெஜினா ஜெகதீஸ்வரன் (சண்டிலிப்பாய் வித்தியாலயம்), எஸ்.கண்ணன் (சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாலயம்), கே.வசந்தராணி (ஏழாலை சைவ மகாஜனா வித்தியாலயம்), யாழினி சதீஸ்குமார் (புனித ஆன்ஸ் றோமன் கத்தோலிக்க மகாவித்தியாலயம்).

ஆர்.பிரிந்தினி (சுதுமலை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை), ரி.கலையரசி(இணுவில் இந்துக் கல்லூரி), எஸ்.சந்திரகலா (மயிலிட்டி றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயம்), எஸ்.மைதிலி (சங்கானை சாதனா அமெரிக்க மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை), எஸ்.அகிலா (சங்கரத்தை சின்னம்மா வித்தியாலயம்), எஸ்.ரஜனி (சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்), எஸ்.சிவனேஸ்வரன் (மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயம்).

யு.காஞ்சனா (பண்டத்தரிப்பு ஜசிந்தா றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்), எஸ்.மனோரஞ்சிதம் (அராலி முருகமூர்த்தி வித்தியாலயம்), என்.கோசலா (பண்டத்தரிப்பு மகளிர் உயர் பாடசாலை), ஏ.குகனேசன் (குப்பிளான் விக்னேஸ்வரா மகாவித்தியாலயம்), எஸ்.அண்ணாமலை (ஏழாலை மகாவித்தியாலயம்), என்.ஜெயந்தி (கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயம்), பி.சாந்தினி (துணைவி அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை).

கே.குமுதினி (கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயம்), கே.தங்கலெட்சுமி (சுழிபுரம் கிழக்கு அமெரிக்கன் மிசன் தமிழ்க்கலவன் பாட சாலை), வை.கௌரி (சுன்னாகம் மயிலணி சைவ மகாவித்தியாலயம்), எஸ்.கிருஷ்ணகுமாரி (சுன்னாகம் மயிலணி சைவ மகாவித்தியாலயம்), எஸ்.கவிதா (அருணாசலம் வித்தியாலயம்), ஜி.மேனகா (உடுவில் மான்ஸ் தமிழ்க்கலவன் பாடசாலை), கே.கைலைநாதன் (சங்கரத்தை சின்னம்மா மகாவித்தியாலயம்), பி.அனுசியா (மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாலயம்).

பி.வசந்தினி (ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாலயம்), ஏ.பத்மினி (துணைவி அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை), பி.சிவகுமார் (ஏழாலை மகாவித்தியாலயம்), பி.லதீஸ்வரி (மாதகல் நுணசை வித்தியாலயம்), ஆர்.சுமதி (சங்கானை மேற்கு சைவப்பிரகாச வித்தியாலயம்), ரி.ஜெயகௌரி (சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாலயம்), எஸ். லலிதா (புனித சிற்றம்பலம் வித்தியாலயம்), கே.சுதர்சினி (ஆனைக் கோட்டை றோமன் கத்தோலிக்க மகாவித்தியாலயம்), ஆர்.சரோஜா (குப்பிளான் விக்னேஸ்வரா மகாவித்தியாலயம்), எஸ்.சுமதி (குட்டியப்புலம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை), ரி.றூபி (பண்டத்தரிப்பு யசிந்தா றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்), எஸ்.ஜீவரேகா (சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்), ரி.சிவராசலிங்கம் (பண்ணாகம் வடக்கு அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை).

எஸ்.அனிற்றா ராஜி (பண்டத்தரிப்பு ஜசிந்தா றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்), பி.தர்சினி (குட்டியப்புலம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை), எஸ்.கோசலா (ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாலயம்), ஜே.கே.ஜரின் தயாளினி (மானிப்பாய் புனித அன்ரனிஸ் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை) எஸ்.சபாபதி (சுன்னாகம் மயிலணி சைவமகாவித்தியாலயம்), வி.சுதந்தினி (சங்கரத்தை சின்னம்மா மகாவித்தியாலயம்), பி.கௌரி (வட்டு. திருஞானசம்பந்த வித்தியாலயம்), பி.சுஜாதா (பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி), ஏ.குகதாசன் (பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம்).

**வடமராட்சி வலயம்**

எஸ்.மதிவதனா (வதிரி வடக்கு மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை), கே.இந்திரன் (கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயம்), எஸ்.வரதராஜா (கரவெட்டி கிழக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை), சு.கௌசல்யா (கொற்றாவத்தை அமெரிக்க மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை).

வ.ஜெயகௌரி (மாதனை மெதடிஸ்த மிசன் தமிழ்க்கலவன் பாடசாலை), செ.ஜெகதாம்பிகை (தொண்டமனாறு வீரகத்திபுலம் மகாவித்தியாலயம்), புஷ்பரதி சேகர் (கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்), க.அமிர்தகலா (வட இந்து மகளிர் கல்லூரி), த. சுசித்தா (வல்வெட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை).

## விளம்பரப் பலகைகள் தூக்கி வீசப்பட்டன!

செம்மணி வெளியில் நாட்டப்பட்டிருந்த விளம்பரப் பலகைகள், தற்போது வீசிவரும் கடும் காற்றினால் தூக்கி வீசப்பட்டுள்ளன.

பெருந்தொகைப் பணத்தை செலவுசெய்து அமைக்கப்பட்ட இவ் விளம்பரப் பலகைகள், காற்றினை எதிர்த்து நிற்கக்கூடிய வகையில் எதுவித முன்னேற்பாட்டு நடவடிக்கைகளும் செய்யப்படாததாலேயே தூக்கி வீசப்பட்டன. (24)

## நாவற்குழி வீடுகளில் ஓடுகள், கூரைகள் அபகரிப்பு

நாவற்குழி வீடமைப்புத் திட்டத்தில் உள்ள வீடுகளில் - ஏற்கனவே விற்பனை செய்யப்பட்ட வீடுகளிலும், லொத்தர் மூலம் விற்பனை செய்யப்படவுள்ள வீடுகளிலுமுள்ள ஓடுகள், கூரைமரங்கள் என்பன இரவு நேரங்களில் திருடப்படுகின்றன.

இப்பகுதிக்கு இரவு நேரங்களில் வருபவர்கள் - ஓடுகள், கூரைமரங்கள் என்பவற்றைக் கழற்றி உடனடியாகவே உழவியந்திரங்களில் ஏற்றிக்கொண்டு செல்வதாகவும், இதனால் - வீடமைப்புத் திட்டத்திலுள்ள பலவீடுகள் வெறுமையாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (108)

# மீண்டும் ஒரு போர் வருவதைத் தவிர்க்க உலகெங்கும் கேட்க குரல் கொடுப்போம்!

## பொங்கு தமிழுக்கு அழைப்பு விடுத்து பல்கலை மாணவர் ஒன்றியம் அறிக்கை

சமாதானம் வந்துவிட்டதாகவும், தமிழ் மக்களுடைய வாழ்வு வழமைக்குத் திரும்பிவிட்டதாகவும் கூறிவரும் ஸ்ரீலங்கா அரசு, வடக்கு - கிழக்குப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதாகவும் பொய்ப்பிரசாரம் செய்து வருகின்றது. விடுதலைப் புலிகளுடன் பேசி, சரியானதொரு தீர்வைக் கொடுப்பதாகவும் ஏமாற்றுப் பிரசாரத்தைச் செய்துவருகின்றது.

ஆனால், உண்மையில் - தமிழ் மக்களின் வாழ்வு நிலையில் இன்னமும் மாற்றம் ஏற்படவே இல்லை. இன்னமும் எம் ஊர்களில் அகதி முகாம்கள் இருக்கின்றன. மக்கள் காவலரண்களைத் தாண்டியே பயணம் செய்யவேண்டியுள்ளது. சொந்த வீடுகளைப் பார்க்கக்கூட வகையற்று மக்கள் தவிக்கின்றனர். முள்ளுக் கம்பிகளுக்கு அப்பால், தம் வீடுகள் சிறைப்பட்டுக் கிடப்பதனை நினைத்தபடியே ஓட்டைக் கூரைக் குடிசைக்குள் முடங்கிப் போகின்றனர். வரிசையில் நின்று பாஸ் எடுத்து, அதை இராணுவத்துக்குக் காண்பிப்பதற்காக சேட்டில் பொருத்தியபடியே, எமது கடலுக்குள் நாங்கள் இறங்க வேண்டியிருக்கிறது.

-இவ்வாறு பொங்கு தமிழுக்கு அழைப்பு விடுத்து யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

நிம்மதியற்றுப் போய்விட்ட ஒரு வாழ்வே - எம்மக்களுக்கு இன்று சொந்தமாகிவிட்டது. இப்படியான ஒரு நிலையில் - எம் பிரதேச அபிவிருத்தி பற்றிப் பேசுகிறார்கள். அகதி வாழ்விலேயே எம்மைத் தொடர்ந்து இருத்த முனைகிறார்களே தவிர, எம் ஊர்களுக்கு எம்மை அனுப்ப அரசு பின்னடிக்கின்றது. பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் ஆக்கிரமிக்கப்பட்ட எமது வீடுகளில் - நாம் மீண்டும் குடியேறாதவரை, எமக்கு எந்தவித சமாதானமும் நிறைவைத் தராது. அதனால்தான், "நாம் எமது வீடுகளுக்குச் செல்வதற்காக, இராணுவத்தினரே உங்கள் வீடுகளுக்குச் செல்லுங்கள்'' என்ற எம் ஆசையை நாம், சர்வதேசத்துக்குச் சொல்ல முனைகின்றோம்.

அரசும், போரை விரும்பும் - போரால் லாபமடையும் சக்திகளும் மீண்டும் ஒரு போரை இங்கு தொடர முனைகின்றன. மீண்டும் எம் மண்ணில் குண்டுகளைக் கொட்டி, சாவுகளை ஏற்படுத்தி, இரத்தக் களரியை உண்டாக்குவதற்காகச் செயற்பட்டுவருகின்றன.

ஆனால், இங்கு சர்வதேச நாடுகளின் அழுத்தத்தினால் - அரசு-தமிழ்மக்களின் பிரதிநிதிகளோடு நடத்திய பேச்சுவார்த்தையைக் குழப்பினால், தம்மீது உலக நாடுகளின் அழுத்தம் ஏற்படும் என்பதினால் சமாதானத்தைக் குழப்பாது காத்திருக்கின்றது.

அதேவேளையில், பேச்சுவார்த்தையில் முன்மொழியப்பட்ட நடைமுறைகளைச் செயற்படுத்தாது இழுத்தடித்தும், விடுதலைப் புலிகள் மீது - தரையிலும், கடலிலும் தாக்குதல்களை நடத்தி - அவர்களைக் கோபமடையச் செய்து புலிகள் தாமாகப் போரை ஆரம்பிக்குமளவுக்குச் சூழ்நிலையை உருவாக்கவும் முனைகிறது. பலதடவை இவ்வாறு நடந்தாலும், புலிகள் காத்துவரும் போர்நிறுத்தம் - போரை விரும்பும் சக்திகளுக்கு ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 14.06.2003 அன்று தமிழீழத்தின் கிழக்குப் பகுதியில், சர்வதேச கடற்பரப்பில் வைத்து, மாலுமிகளான 12 போராளிகள் பயணம் செய்த கப்பலைத் தாக்கி அழித்து, 12 போராளிகளையும் கைதுசெய்துள்ளது. இது, ஏற்கனவே பேச்சுவார்த்தைக்குப் போகாது இடைநிறுத்தியும், ஜப்பான் உதவி வழங்கும் நாடுகள் மாநாட்டை நிராகரித்தும் - தமிழ்மக்களின் அன்றாட பிரச்சினைக்கான தீர்வைத் தருமாறு கோரும் விடுதலைப் புலிகளை, மேலும் சீற்றமடைய வைத்துள்ளது.

உண்மையில், மக்களின் வாழ்வு நல்லதாக அமையவேண்டும் என்பதில் அக்கறையுடைய விடுதலைப் புலிகள், போரை ஆரம்பிப்பதில் நிச்சயமாக ஆர்வம்காட்டமாட்டார்கள் என்பது உண்மை. ஆனால், இப்படியான சம்பவங்களில் - தொடர்ந்து மக்களும், போராளிகளும் உயிரிழந்துபோகின்ற நிலையில், தமிழ் மக்களைக் காக்கவேண்டிய பொறுப்பு விடுதலைப் புலிகளிடம் இருப்பதால், மீண்டும் ஒரு போர் தவிர்க்க முடியாததாகலாம்.

ஆனாலும், அதற்கு முன்பாக நாம் எமது உண்மை நிலையினை உலகிற்கு உணர்த்துவதினூடாக - சர்வதேச அழுத்தத்துடன் ஸ்ரீலங்கா அரசின் இவ்வாறான போர்நிறுத்த மீறல்களை நிறுத்த முடியும். இதற்காக மக்கள் எல்லோரும் திரளுவோம். உலகிற்கு எமது தேசத்தின் உண்மை நிலைகளை எடுத்து விளக்குவோம்.

அதற்காக, எதிர்வரும் 27 ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் திரளுவோம். மீண்டும் இங்கு ஓர் போர் வருவதினைத் தவிர்க்கவும், எம் இன்றைய அகதி வாழ்வை இல்லாமல் செய்து, எமது ஊர்களில் மீண்டும் சந்தேசமாக வாழவும் வழிசெய்ய வேண்டுமென்று உலகெங்கும் கேட்கும்படி குரல் கொடுப்போம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உயர் நீதிமன்ற வழக்குகளில் சரியாகத் தயாரிக்காத அறிக்கைகள்

## பிரதம நீதியரசர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாடு முழுவதிலுமுள்ள 16 உயர் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டிருந்த 200 வழக்குகளின் மீதான விசாரணையின் தீர்ப்புகள் - அவற்றை விசாரணை செய்த நீதிபதிகளால் சரியாகத் தயாரிக்கப்பட்டு, மேல்நீதிமன்றுக்கு சமர்ப்பிக்கப்படாததால் - தீர்ப்பை எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்ட மேல் முறையீடு மீதான விசாரணைகளை மேற்கொள்ள முடியாதிருப்பதாக, பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பு, இரத்தினபுரி, பதுளை, அம்பாந்தோட்டை, அனுராதபுரம் போன்ற மாவட்ட உயர்நீதிமன்றங்களே, வழக்குகள் மீதான விசாரணைகளை மேல்நீதிமன்றில் சமர்ப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## சட்டவிரோத மின்சாரம்

(மானிப்பாய்)

சுதுமலை - சாவற்கட்டு குடியேற்றப் பகுதிகளில் சட்டவிரோதமான மின்சாரம் பெறுவோர் அதிகரித்துள்ளதால், இப்பகுதியில் அடிக்கடி மின் தடங்கல் ஏற்படுகின்றது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர்.

நிறஞ்சனாஸ் சங்கானை

விஜயகாந், பிரகாஷ்ராஜ், சௌந்தர்யா நடித்த

சொக்கத் தங்கம்

காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு. 8.45 (பு.நே) (சி-974)

BEHIND ENEMY LINE

ராஜா யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடு சரத்குமார், மீனா, ரம்யா கிருஷ்ணன் நடித்த

கே.எஸ்.ரவிக்குமாரின்

பாறை (சி-973)



10.30, 2.30, 6.30, 9.30

## நகர சபை, சாவகச்சேரி

## அறிவித்தல்

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் புதிதாகக் கட்டடம் அமைத்தல், விஸ்தரிப்புச் செய்தல், மலசலகூடம் அமைத்தல், எல்லைச் சுவர் அமைத்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வரியிறுப்பாளர்கள், நகரசபை அலுவலகத்தில் கட்டட விண்ணப்பத்தினைப் பெற்று, அதனைப் பூர்த்திசெய்து ஒப்படைத்து, உரிய அனுமதியினைப் பெற்ற பின்னரே, கட்டட அமைப்பு வேலைகளை மேற்கொள்ளுமாறு இத்தால் கேட்டுக்கொள்கின்றேன்.

அவ்வாறு அனுமதி பெறப்படாது அமைக்கப்படும் கட்டடங்கள் மீது 1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ், சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென்பதையும் இத்தால் தெரிவித்துக் கொள்கிறேன்.

மு.செ.சரவணபவ,
செயலாளர்,
நகரசபை, சாவகச்சேரி

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி 11.06.2003.

(சி-1091)

# வவுணதீவு சோதனைச்சாவடியிலும் இராணுவத்தினர் சோதனையில்!

மட்டக்களப்பு - வவுணதீவு இராணுவச் சோதனைச் சாவடியில், கடந்த சனிக்கிழமை தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து, சென்ற பொதுமக்கள் கொண்டு சென்ற பொருட்களைப் படையினர் சோதனை செய்தனர்.

அத்துடன், வாகனங்களில் சென்ற பயணிகளையும் இறக்கி - வவுணதீவில் இராணுவத்தினர், பொலிஸார், புலனாய்வுப்பிரிவினர் ஆகியோர் சோதனை செய்துள்ளனர். இதனால், பொதுமக்கள் பெரிதும் பீதியடைந்துள்ளனர்.

# வெளிநாடுகளில் உள்ள தூதரகங்களில் பொருளாதார அபிவிருத்தி நிலையங்கள்

வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களில், பொருளாதார அபிவிருத்திக்கான விசேட நிலையங்களை உருவாக்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக, வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

வெளிநாடுகளிலுள்ள அனைத்து தூதரகங்களிலும், இந்த விசேட பொருளாதார அபிவிருத்திக்கான நிலையங்கள் உருவாக்கப்பட்டு - அவற்றுக்கான இலக்குகள் தெளிவாக வரையறுக்கப்படும். அந்தந்தத் தூதுவர்களே அந்த நிலையங்களுக்கான தலைவர்களாக இருப்பர்.

இதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. ஒவ்வொரு தூதரகத்திற்கும், பொருளாதார இலக்குகள் தனித்தனியாக வகுக்கப்பட்டு - குறிப்பிட்டகாலப் பகுதிக்குள் அவற்றை நிறைவேற்றுமாறு கேட்கப்படவுள்ளது.

சுற்றுலா, உள்ளூர் ஏற்றுமதி, வர்த்தகம் போன்ற துறைகளில் பொருளாதார அபிவிருத்திகளை அதிகரிக்கவே இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

## வடமராட்சியில் சிரமதானம்

உள்ளூராட்சி வாரத்தையொட்டிய சிரமதானப் பணிகள் - வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபையின் செயலாளர் பசுபதி தலைமையில், கடந்த வியாழக்கிழமை நெல்லியடி புதிய சந்தையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சகல பிரதேச உத்தியோகத்தர்களும், சனசமூக நிலையத் தலைவர்களும், செயலாளர்களும் கலந்து கொண்ட, இந்தச் சிரமதானப் பணியில் உள்ளூராட்சி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி கலந்து கொண்டார். (116)

# சமாதான முயற்சியில் ஏற்பட்டுள்ள பின்னடைவு; இன்று சந்திரிகா தலைமையில் ஆராயப்படும்!

## பொ.ஐ.மு. செயலாளர் டி.எம். ஜெயரட்ண தகவல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்திற்கும் இடையிலான சமாதான முயற்சிகளின் தற்போதைய நிலைமை குறித்து, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான, பொதுஜன ஐக்கிய முன்னணியின் உயர்மட்டக்குழு ஆராயவுள்ளது.

இந்தத் தகவலை பொ.ஐ.முவின் செயலாளர் டி.எம்.ஜெயரட்ண, நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசும்போது வெளியிட்டார்.

இன்று ஜனாதிபதி மாளிகையில் இடம்பெறவுள்ள இந்த மாநாட்டில் - எதிர்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட கட்சியின் பல முக்கியஸ்தர்கள் கலந்து கொள்ளவுள்ளதாகத் தெரியவருகின்றது.

புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களில், அண்மையில் ஏற்பட்டிருக்கும் தேக்கநிலை தொடர்பாகவே - இந்தக் கூட்டத்தில் விசேடமாக ஆராயப்படவுள்ளது. தொடர்ச்சியாக சமாதான முயற்சிகளில் ஏற்பட்டு வரும் பின்னடைவுகள் குறித்து, ஜனாதிபதி சந்திரிகா தீவிர கவனம் எடுத்துள்ளதாகவும் -

இதனால், அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து - அவர் தீர்மானிப்பதற்காக கட்சி முக்கியஸ்தர்களுடன் ஆராயவுள்ளதாகவும், டி.எம். ஜெயரட்ண மேலும் தெரிவித்தார்.

அத்துடன், ஐக்கிய தேசிய கட்சி - அரசாங்கத்தின் நிலைப்பாடுகள் குறித்தும், ஜனாதிபதி சந்திரிகா இந்தக் கூட்டத்தில் தனது கட்சி முக்கியஸ்தர்களுடன் ஆராய்வார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## மரம் நாட்டு விழா

(நவிண்டில்)

உள்ளூராட்சி வாரத்தையொட்டிய மரம் நாட்டுவிழா, கடந்த செவ்வாயக்கிழமை உள்ளூராட்சி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி தலைமையில், வடமராட்சி - தெற்கு, மேற்கு பிரதேச சபையில், ஆரம்பித்து வைக்கப்பட்டது. சபைக்கு சொந்தமான காணிகளில் நூற்றுக்கு மேற்பட்ட மரங்கள் இதன்போது நாட்டப்பட்டன. (116)

# மட்டக்களப்பு கைதுகள் பிரதமரிடம் முறைப்பாடு

(மட்டக்களப்பு)

கொழும்பிலிருந்து வரும் புலனாய்வுப்பிரிவினர், இளைஞர்களைக் கைதுசெய்து கொழும்புக்குக் கொண்டு செல்வதால், மட்டக்களப்பு மாவட்ட மக்கள் மத்தியில்- பெரும் பீதியும், சந்தேகமும் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான கைதுகளை உடனடியாக நிறுத்த வேண்டுமென, மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் நேரில் முறையிட்டுள்ளார்.

இது தொடர்பாக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உரிய நடவடிக்கை எடுப்பதாக ஜோசப் பரராஜசிங்கத்திடம் உறுதியளித்துள்ளார்.

கடந்த மாதம் மட்டு - நகர் பகுதியில் வைத்து, வவுணதீவு முன்னாள் பிரதேசசபை உறுப்பினர் வேலாயுதம் என்பவர் - கொழும்பிலிருந்து வந்த புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மட்டு - அம்பாறை கல்வி அதிகாரிகளுடன் விடுதலைப் புலிகளின் தளபதிகள் சந்திப்பு!

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட கல்வி வலய அதிகாரிகள், அதிபர்களுக்கிடையிலான கலந்துரையாடல், கரடியனாற்றில் அமைந்துள்ள தேனகம் விருந்தினர் விடுதியின் ஒன்றுகூடல் மண்டபத்தில் அரசியற்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் தலைமையில் இடம்பெற்றது. நேற்று முன்தினம் இரவு 7.30 மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்வுக்கு, மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட மூத்த தளபதி கேணல் கருணா அம்மான், மட்டக்களப்பு மாவட்ட கல்விப் பணிப்பாளர் பவளகாந்தன், மகளிர் படையணி சிறப்புத் தளபதி நிலாவினி, கல்விப் பகுதிப் பொறுப்பாளர் வரதன் மற்றும் தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள், மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டக் கல்வி அதிகாரிகள், அதிபர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட கல்வி வளர்ச்சி, பொருளாதார முன்னேற்றம் போன்ற விடயங்கள் - இக் கலந்துரையாடலில் ஆராயப்பட்டதுடன், தற்போதைய அரசியல் நிலைமைகள் சம்பந்தமாகவும் ஆராயப்பட்டது.

இந்நிகழ்வு இரவு உணவுடன் நிறைவு பெற்றது குறிப்பிடத்தக்கது.







மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களுக்கிடையிலான கலந்துரையாடலில் - விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை சிறப்புத்தளபதி கேணல் கருணா அம்மான், மட்டு அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், மட்டு - அம்பாறை மகளிர் சிறப்புத் தளபதி நிலாவினி, கல்விப்பகுதிப் பொறுப்பாளர் வரதன் ஆகியோரை முதலாவது படத்திலும் - கலந்துகொண்ட அதிபர்கள், ஆசிரியர்களை ஏனைய இரு படங்களிலும் காணலாம்.

# ஒருவாரத்துக்குள் கடவுச்சீட்டு வழங்குவதற்கு நடவடிக்கை!

சாதாரண சேவையில் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிப்போர், ஒருவாரத்துக்குள் அதனைப் பெறுவதற்கான ஏற்பாட்டினை குடிவரவு, குடியகல்வு திணைக்களம் செய்துள்ளது.

முன்னர் சாதாரண சேவையில் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிப்போருக்கு, அவை இரண்டு வாரங்களுக்குள்ளாக அனுப்பிவைக்கப்பட்டன. அத்துடன், ஒரே நாளில் கடவுச்சீட்டுப்பெற விண்ணப்பிப்பவர்களுக்கும், ஒரு மணித்தியாலயத்துக்குள் கடவுச்சீட்டை வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

துரிதமாக கடவுச்சீட்டுக்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதால், தரகர்களிடம் பொதுமக்களை ஏமாற வேண்டாம் என்றும் குடிவரவு, குடியகல்வு திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை - கடவுச்சீட்டுப்பெற விண்ணப்பிப்போரின் தொகை அண்மைக்காலத்தில் அதிகரித்துள்ளமை குறிப்பீடத்தக்கது.

# அரச மருத்துவர்களின் வேலை நிறுத்தம்; மீண்டும் வைத்தியசேவைகள் செயலிழப்பு!

(கொழும்பு)

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர், நேற்று மீண்டும் வேலை நிறுத்தத்தை ஆரம்பித்ததால் - நாடு முழுவதும் உள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் நோயாளருக்கான சிகிச்சைகள் பாதிக்கப்பட்டன.

கடந்த 10 ஆம் திகதி முதல் அரசாங்க வைத்திய அதிகாரிகள், இரண்டு கோரிக்கைகளை முன்வைத்து, வேலைநிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்தனர். சம்பள முரண்பாடுகளை நீக்குமாறும், வடக்கு - கிழக்கு மருத்துவர்களுக்கான இடைக்காலக் கொடுப்பனவை வழங்குமாறும் கோரியே இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

கடந்த சனிக்கிழமை பொசன் போயா தினத்தை முன்னிட்டு, தமது வேலைநிறுத்தப் போராட்டத்தைத் தற்காலிகமாகக் கைவிட்ட அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம், நேற்றுமுதல் மீண்டும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட ஆரம்பித்துள்ளது.

இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தால், நாடு முழுவதும் உள்ள அரசாங்க பொது வைத்தியசாலைகள் மற்றும் ஆதார வைத்தியசாலைகளில் நோயாளருக்கான சிகிச்சைகள் பெரிதும் பாதிக்கப்பட்டன.

அவசர சிகிச்சைகள் தவிர்ந்த, ஏனைய வழக்கமான அனைத்து சிகிச்சைகளும் திகதி குறிப்பிடப்பட்ட சத்திரசிகிச்சைகளும் இடம்பெறவில்லை.

இதேவேளை, மகரகம தேசிய புற்றுநோய் வைத்தியசாலை மற்றும் பொறளை லேடி றிஜ்வே சிறுவர் வைத்தியசாலை ஆகியவற்றில் இந்த வேலைநிறுத்தப் போராட்டம் இடம்பெறாது என, மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருவதால் - நோயாளர்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியதோடு, தனியார் வைத்தியசாலை நோக்கியும் படையெடுப்பதை காணமுடிந்தது.

இதேவேளை, அரசாங்க மருத்துவ அதிகாரிகளுக்கான சம்பள முரண்பாடுகளைத் தீர்ப்பது தொடர்பாக, தான் அமைச்சரவைக் கூட்டத்தில் நாளை விவாதிக்கவுள்ளதாக சுகாதார அமைச்சர் பி.தயாரத்ன தெரிவித்தார்.

தம்மால் மருத்துவர்களின் கோரிக்கைகள் தொடர்பாக, எதுவும் செய்ய முடியாது என்றும் - அமைச்சரவைக் கூட்டத்திலேயே முடிவுகளை எடுக்கமுடியும் என்றும், அவர் மேலும் தெரிவித்தார்.

# போதைப்பொருள் தவிர்ப்பு நாள்; பாடசாலைகளில் நிகழ்ச்சிகள்!

## கல்வி அமைச்சர் பணிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் 23 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள போதைப் பொருள் தவிர்ப்பு வாரத்தை முன்னிட்டு - 26 ஆம் திகதி சகல பாடசாலைகளிலும், போதை எதிர்ப்பு நாள் நிகழ்வுகளை நடத்துமாறு - கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு பாடசாலை அதிபர்களுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

பாடசாலைகளில் நடைபெறவுள்ள போதை எதிர்ப்பு நாள் நிகழ்வுகளில் - மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும் போதைப்பொருள் தொடர்பான, விழிப்புணர்வுகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல், பெற்றோர்களுக்கான விழிப்புணர்வுக் கண்காட்சிகளையும் ஒழுங்கு செய்யுமாறு, பாடசாலை அதிபர்களை கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு கேட்டுள்ளார்.

# சமாதானத்தைக் குழப்பும் செயல்களுக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்

## யாழ். பொது அமைப்புக்களின் ஒன்றியம் கண்டனம்

சுழிபுரம் - வழக்கம்பரையில், போராளி ஒருவரைச் சோதனையிடப் படையினர் முற்பட்டதற்கும், அச்சமயம் எதிர்ப்புத் தெரிவித்த பொது மக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கும் கண்டனம் தெரிவித்து, யாழ். மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

வழக்கம்பரை- சுழிபுரம் வீதியில் வைத்து, இராணுவத்தினர்- விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் போராளி தமிழன் என்பவரை வழிமறித்து சோதனை செய்ய முற்பட்டுள்ளனர். தான் விடுதலைப் புலி உறுப்பினர் என அடையாளப்படுத்தியபோதும், அடையாள அட்டையைப் பறித்து அவரது கைப்பையை சோதனையிட முனைந்துள்ளனர். அவரை அச்சுறுத்திப் பணியவைக்கும் நோக்குடன், 300 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் அங்கு குவிக்கப்பட்டனர்.

இச்சம்பவத்தைக் கேள்வியுற்ற மக்கள்- அங்கு செல்ல முற்பட்ட போது, அம்மக்கள் மீது இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இதன்போது, 6 பேர் காயமடைந்தனர்.

அதேவேளை, சண்டிலிப்பாய் அரசியற்துறைப் பெண் போராளிகளின் முகாம் மீதும் கைக்குண்டு வீசப்பட்டுள்ளது. அது வெடிக்கவில்லை. பின்னர்- நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் மீண்டும் கைக்குண்டு வீசப்பட்டது. அது வெடித்துச் சிதறியுள்ளது. இவ்வாறான சம்பவங்கள் நடைபெறுவதற்கு அரச படையினர்தான் காரணம்.

தமிழ் மக்கள்- சமாதானத்தின் மீது உறுதியான பற்று வைத்து, சமாதானத்திற்காக உழைக்கும்போது-

சமாதானத்திற்கு விரோதமான வகையில், புலிகளைச் சீண்டுவதன் மூலம் நன்மை எதையும் அடைய முடியாது. மாறாக, மக்களின் வெறுப்பையே சம்பாதிக்க நேரிடும்.

கப்பலில் இருந்த 12 போராளிகளின் நிலையறியாது தவிக்கும் சோகமான நிலையில், படையினர் இப்படியான சூழ்நிலையைத் தோற்றுவிக்க முற்படுவதேன்?

சமாதான விரோத சக்திகளால், இன்று சமாதானத்திற்கு நெருக்கடி ஏற்பட்டுள்ள சூழ்நிலையில், இது போன்ற சம்பங்கள் நிகழ்வதை அரசாங்கம் வெறுமனே பார்த்துக் கொண்டிருந்தால் எவ்வாறு சமாதானம் வலுப்படுத்தப்படும்? படையினர்- இவ்வாறான பதற்றமான சூழ்நிலையினை ஏற்படுத்துவரானால், அதனை தமிழ் மக்கள் ஏற்கமாட்டார்கள். இந்தச் செயல்களை, ஒன்றியம் வன்மையாகக் கண்டிக்கிறது. இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், நாடு தழுவும் போராட்டத்திற்கு ஒன்றியம் தயாராகவுள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

- என இந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சந்நிதியான் ஆச்சிரமத்தில்

(வடமராட்சி கிழக்கு)

சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறும் வாராந்தநிகழ்வில், வரும் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு, 'பகவத்கீதை' தொடரின் தொகுப்புரையை, யாழ்ப்பாணக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் நிகழ்த்துவார்.

## ஊனமுற்றோர் பாதுகாப்புக்கான குழுக்கள் அமைப்பு

(வடமராட்சி கிழக்கு)

மருதங்கேணிப் பிரதேச செயலர் பிரிவில், ஊனமுற்றோர் பாதுகாப்புக் குழு அமைப்புக் கூட்டங்கள் மூன்று கிராம அலுவலர் பிரிவுகளில் இன்று நடைபெறவுள்ளன.

கேவில்- போக்கறுப்பு கிராம அலுவலர் பிரிவில் காலை 11 மணிக்கும், முள்ளியான் கிராம அலுவலர் பிரிவில்- பி.ப.2 மணிக்கும், வெற்றிலைக்கேணி கிராம அலுவலர் பிரிவில்- பி.ப.3 மணிக்கும் இக் கூட்டங்கள் நடைபெறுமென மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி.ப. வேலாயுதபிள்ளை அறிவித்துள்ளார்.

(17)

# பொது நூலகங்களின் நூலகர்களுக்கு மூன்று நாள்களுக்குப் பயிற்சிப் பட்டறை

(வடமராட்சி கிழக்கு)

பொது நூலகங்களில் கடமையாற்றும் நூலகர்களுக்கு, மூன்று நாள் பயிற்சிப்பட்டறை ஒன்றை இலங்கை தேசிய நூலக ஆவணவாக்கல் மத்திய நிலையம் நடத்தவுள்ளது.

ஜூலை மாதம் 2 ஆம் திகதி தொடக்கம் 4 ஆம் திகதிவரை, கொழும்பு சுதந்திரசதுக்கத்தில் உள்ள நிலைய மண்டபத்தில் இந்தப் பயிற்சிப் பட்டறை நடைபெறும்.

இப்பயிற்சிநெறியில் கலந்து கொள்ளுமாறு உள்ளூராட்சி மன்ற நூலகர்களுக்கு இலங்கை தேசிய நூலக ஆவணவாக்கல் மத்திய நிலையத்திலிருந்து பேராசிரியர் திஸ்ஸ காரியவாசகம் அறிவித்துள்ளார்.

பொது நூலகங்களுக்கு, நவீன நூலக சாதனங்களைப் பேணுதல் தொடர்பான செயல்முறை, கோட்பாட்டு ரீதியான பயிற்சிகளே வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஈ)



மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி தொடர்பாக ஆராய்வதற்கு நேற்று முன்தினம் அங்கு விஜயம் செய்த - பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் மற்றும் அதிகாரிகளைப் படத்தில் காணலாம்.

## இரவு 8 மணிவரை திறந்திருக்கக் கோரிக்கை

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேசத்தில் இயங்கும் கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிரப்பு நிலையங்களை, காலை 5 மணிமுதல் இரவு 8 மணிவரை இயங்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச செயலாளரிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இதையடுத்து - உரியவர்களுடன தொடர்புகொண்டு, விரைவில் நடவடிக்கை மேற்கொள்வதாக பிரதேச செயலர் உறுதியளித்துள்ளார்.

# புழுதி கிளப்பும் வாகனங்களால் ஏ - 9 வீதிப் பயணிகள் சிரமம்!

(யாழ்ப்பாணம்)

யாழ். கண்டி வீதியில், புழுதியைக் கிளப்பிக்கொண்டு வேகமாகச் செல்லும் வாகனங்களால் - வீதியில் பயணிக்கும் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

வாகனங்கள் புழுதி கிளப்புவதால், மோட்டார் சைக்கிள் மற்றும் சைக்கிளில் செல்வோர் தடுமாறுவதையும் அவதானிக்க முடிகிறது. தற்போது ஏ-9 வீதி திருத்தியமைக்கப்பட்டு வருவதால், போக்குவரத்தில் சிரமம் ஏற்பட்டிருக்கிறது.

இதனால் நேரத்துக்குப் பயணிக்க வேண்டும என்ற காரணத்தால், முண்டியடித்துக் கொண்டு செல்லும் வாகனங்களாலேயே இவ்வாறு பொதுமக்களுக்கு அசௌகரியம் ஏற்படுகிறது.

இதனால், அடிக்கடி வீதி விபத்துக்கள் ஏற்படுவதும் குறிப்பிடத்தக்கது.

## மீசாலையில் கணபதி ஹோமம்

(மீசாலை)

மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடி பிள்ளையார் ஆலய வருடாந்த கணபதி ஹோமம், எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

13ஆவது வருடமாக நடத்தப்படும் இந்த கணபதி ஹோமத்திற்கு ஆலய பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ சிதம்பரநாதக் குருக்கள் தலைமை தாங்குவார்.

# அருஞ்செயல் செய்த பெரியோராலேயே எமது நாட்டுக்கு உண்மையான பெருமை!

## கந்தமுருகேசனார் சிரார்த்த தினத்தில் உரை

(நெல்லியடி)

'ஒரு நாட்டிற்கு உண்மையான பெருமை ஓங்கியுயர்ந்த கோபுரங்களாலோ, உப்பரிகைகளாலோ உண்டாவதில்லை. கல்வியிற் சிறந்த பேரறிஞரும், பெரியாரும் - மொழி, இனம் வாழ அருஞ்செயல் செய்தோராலேயே பெருமை கிடைக்கிறது.'

-இவ்வாறு தென்புலோலி முதறிஞர் கந்தமுருகேசனாரின் 38 ஆவது சிரார்த்ததினத்தை முன்னிட்டு, மந்திகையிலுள்ள அவரது சிலையின் முன்பாக இடம்பெற்ற விழாவில், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய பண்டிதர் வீ.பரந்தாமன் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இந்த விழாவில், கந்தமுருகேசனார் சிலைக்கு- பிரதம விருந்தினர் மலர் மாலை அணிவித்து, அஞ்சலி செலுத்தினார்.

அங்கு பண்டிதர் பரந்தாமன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது-

தொல்காப்பியர் தோன்றி தமிழுக்குப் பெருமை தந்தார். வள்ளுவர் தோன்றினார்- தமிழினத்துக்கும் உலகத்துக்கும் பெருமை அளித்தார். அவ்வாறே சங்கசான்றோர், கம்பர், இளங்கோ முதலியோரால் நாம் பெருமை பெற்றோம். பெரியார், அண்ணா, பாவேந்தர், தேவநேயப்பாவணர் முதலியோரால் தமிழ்நாடு பெருமையடைகிறது.

ஈழத்துப் பூதத்தேவனார், ஆறுமுகநாவலர், விபுலானந்தஅடிகள் ஞானப்பிரகாசர், தங்கத்தாத்தா, கதிரவேற்பிள்ளை, கந்தமுருகேசனார் முதலிய பெரியோர்கள் தோன்றியமையால், எமது நாடும் பெருமை அடைகிறது.

இப்பெரியாரை நினைவு கூறுவதனால் நாம் பெருமையும், மகிழ்ச்சியும் அடைவது மாத்திரமல்ல- எதிர காலத்திலும் மொழி, இனம், நாட்டுக்காக உழைக்கும் ஈகம் நிறைந்த பெரியோர் உருவாவதற்கு ஊக்கம் அளிக்கிறோம் என்பதையும் நினைவில் கொள்ளவேண்டும்.

முத்தமிழுக்கு - பகுத்தறிவுக்கு- அறிவியலுக்கு விழாச்செய்யுங்கள், அது பயனுள்ளதாகும்.

மொழிக்காக, இனத்துக்காக, நாட்டுக்காக, ஈகமுடன் உழைத்தவரைப் போற்றவும், நினைவு கூரவும் தவறுவோமானால், மறப்போமானால்- பெருமைகளும் அழியும், இனத்தின் வாழ்வும் அழிந்துபோகும் என்பதே உண்மையாகும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (17)


வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

மூன்றாவது அகவையில்

பெயர்கள் : வ.அரிராஜ்,
வ.ஹரிராஜ்
முகவரி : இலகடி வீதி, கரவெட்டி.



ஐந்தாவது அகவையில்

பெயர் : ர.சஞ்ஜெயன்
முகவரி : கச்சேரி-நல்லூர் வீதி



ஆறாவது அகவையில்



பெயர் : ற.விதுஷன்
முகவரி : 10 ஆம் வட்டாரம்,
நெடுந்தீவு.

பல்லாண்டு காலம்
வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:--------------------------------
முகவரி :--------------------------------
பிறந்த ஆண்டு:--------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.



-----------------
பெற்றார் ஒப்பம்

# எயிட்ஸின் ஆரம்பம் கண்டுபிடிப்பு



குரங்களில் எயிட்ஸ் நோயைத் தோற்றுவிக்கும் HIV வைரஸ்களை மரபணுப்பரிசோதனை மூலம் சோதித்ததில், மனிதனுக்கு எயிட்ஸை ஏற்படுத்தும் HIV வைரஸ், சிம்பன்ஸி குரங்கிலுள்ள இரண்டு வேறு வைரஸ்கள் இணைந்து உருவாகுவதனாலேயே தோன்றுவதாக அறியப்பட்டுள்ளது. இதன்மூலம், எயிட்ஸின் ஆரம்பம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சிம்பன்ஸியிலுள்ள இந்த இரு வைரஸுகளும், மனிதனுக்கு எப்படிச் சென்றது?. மேற்கு ஆபிரிக்கர்கள் இவ்வகை குரங்கின் இறைச்சியை சாப்பிடுவதாலும், சில சமயச் சடங்குகளில் இவற்றின் இரத்தத்தைக் கையாள்வதாலுமே, இந்த வைரஸ்கள் மனிதனுள் தொற்றை ஏற்படுத்தி எயிட்ஸுக்குக் காரணமாகினவாம்.

முதலில் எயிட்ஸ் கண்டுபிடிக்கப்பட்டது 1981 இல் அமெரிக்காவிலாகும். எனினும், 1969 இல் இறந்த அமெரிக்க கறுப்பின இளைஞன் ஒருவனின் இரத்தத்திலும், இத்தகைய புதிய வைரஸ் மாதிரிகள் இருந்ததையும் மருத்துவ அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

புதிய ஆய்வுகளின்படி, 1940 களில் ஆபிரிக்கக் கண்டத்தில் பரவ ஆரம்பித்த இந்த எயிட்ஸ் நோய், 1960 களில் அதிகரித்த விமானப் போக்குவரத்தினால் உலகம் முழுவதும் வியாபித்ததும் தெரியவந்திருக்கிறது.




# இந்தியாவில் முதன்முதலாக இன்ரநெற் பாதுகாப்பு மையம்



இந்தியாவின் முதலாவது இன்ரநெற் பாதுகாப்பு மையம், அடுத்தமாதம் முதல் இயங்கவுள்ளது. முக்கியமான பாதுகாப்பு, வர்த்தக, அரச நிறுவனங்களின் கம்பியூட்டர்களில் சைபர் (CYBER) தாக்குதல் மேற்கொள்ளப்படுவதை, இந்த மையம் தடுக்கும் பணியில் ஈடுபடும்.

அமெரிக்காவின் பாதுகாப்பு நிறுவனங்களில் ஒன்றான Cert உடன் இணைந்து, இந்திய மத்திய தகவல் தொழில்நுட்ப அமைச்சு இத்திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

20 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில், இந்த மையம் அமைக்கப்படுகிறது. டெல்கியில் முதலில் அமையும் இந்த நிறுவனத்தைத் தொடர்ந்து இரண்டாவது மையம் பெங்களூரில் ஆரம்பிக்கப்படும்.

# திரை விமர்சனம்

## சாமி



விக்ரமின் நான்காவது ஹிட் படம் 'சாமி'. பொலிஸ் - ஊழல் அரசியல்வாதி கதைதான் இது. திருநெல்வேலி மாவட்ட பிரதிப் பொலிஸ் அதிபர் ஆறுசாமியான விக்ரம், நகரைத்தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பவர். பெருமாள் பிச்சை என்ற பிரபலஸ்தரிடம் அடிக்கடி லஞ்சம் வாங்குவது போல் நடிக்கிறார் ஆறுசாமி. இறுதியில் அவருக்கு எதிராகவே பூகம்பமாகிறார். இதன்போதே இந்தத் திரைப்படமும் சூடு பிடிக்கிறது. இது இறுதிவரை தொடர்கிறது.

திரைப்படத்தின் வசனங்கள், மனதில் நிற்கக்கூடியவாறு அமைக்கப்பெற்றுள்ளன. நான் பொலிஸில்லை பொறுக்கி, ஒன்றுசாமி... இரண்டு சாமி, என்ற அடுக்கு வசனங்கள் விக்ரமின் நடிப்போடு வலுவாகின்றன. வன்முறைமுறைகள் உள்ள படமானாலும், அவை வித்தியாசமாகவே படமாக்கப்பட்டுள்ளது. த்ரிஷாவும் தன்னாலியன்றளவு நடித்துள்ளார். தனது மூன்றாவது படத்திலேயே அவர் சாதித்துள்ளார். சிறினிவாசராவின் வில்லத்தனமான கண்கள் படுபயங்கரம். இரண்டு ஊழல் எம்.எல்.ஏக்களை அவர்கள் வழியிலேயே போய் மடக்கும் விக்ரமின் நடிப்பு சுவாரஸ்யமான காட்சிகள். ஹரிஸ் ஜெயராஜ்ஜின் இசை சாமியாட வைக்கிறது. சண்டைக்காட்சிகள் குறுகியதாக அமைக்கப்பட்டிருப்பது, ஏனையவர்களுக்கு பாடமாக இருக்கும். அடிதடிப் படங்கள் என்றால் இறப்புக்களும் இருக்கும். இங்கு விக்ரமின் தந்தை விஜயகுமார் கொல்லப்படுகின்றார். விஜயகுமாரின் பாத்திரம் கூறுமளவிற்கில்லை. நகைச்சுவைப் பாத்திரத்தில் விவேக்கின் பங்களிப்பு தூள் கிளப்புகின்றது. போக்குவரத்துப் பொலிஸ் கொன்ஸ்டபிளுடன், மோட்டார் சைக்கிளில் ஏழரை அடித்துக்காட்டும் காட்சி, வயிறு குலுங்க வைக்கிறது. மூடநம்பிக்கைகளுக்கும், கல்விப் புறக்கணிப்புக்களுக்கும், சாதி வேறுபாடுகளுக்கும் எதிரான விவேக்கின் நகைச்சுவை நடிப்பு மீண்டும் அவரைத் தூக்கி நிறுத்தியுள்ளது.



பழைய கதையானாலும் - சொல்லப்பட்ட விதமும், நடிப்பாற்றலும் 'சாமி'யைச் சரணம்போட வைக்கின்றன.

# உலகப் புகழ் பெற்ற இயக்குநர்கள்

நகர மேயர் அந்தச் சுறாமீனை வேட்டையாடுவதற்கு ஏற்பாடு செய்கிறார்.

வேட்டைக்காரரும் ஒரு சுறாமீனை வேட்டையாடி வருகிறார். சுறா மீன் வேட்டையாடப்பட்டதை அறிவித்தவுடன், மீண்டும்



ஜாஸ் படத்தில் ஒரு காட்சி

சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிக்கத் தொடங்குகிறது. ஆனால், இதுவரை ஆட்களை விழுங்கிய சுறா, உண்மையில் கொல்லப்படவில்லை, அது இன்னும் உயிருடன்தான் உள்ளது என்பதை கடல் ஆராய்ச்சியாளர் - மேயரிடம் தெரிவிக்கிறார்.

ஆராய்ச்சியாளருடன் பொலிஸ் அதிகாரி ஒருவரும், சுறாவேட்டைக்காரரும் கடலில் சுறா வேட்டைக்குப் புறப்படுகின்றனர்.

இருபத்தெட்டு அடி நீளம் கொண்ட சுறா, இந்த மூவரின் பார்வையிலும் பட்டு, அவர்களை ஏமாற்றி அலைக்கழிக்கிறது. இந்தப் போராட்டத்தில், சுறா வேட்டைக்காரர், சுறா மீனால் விழுங்கப்படுகிறார். மீதமுள்ள இருவரும் கடைசியில் உண்மையான சுறா மீனைக் கொன்றுவிடுகின்றனர்.

படத்தில் இடம்பெற்ற ஒவ்வொரு காட்சியும் பார்வையாளர்களைத் திகில் கொள்ளவும், பரவசப்படுத்தவும் செய்தன என்பது உண்மை. அந்த அளவுக்கு காட்சிகள் தத்ரூபமாகவும், திகிலூட்டும் அளவிலும் அமைந்திருந்தன. இசையமைப்பும் - திகிலை அதன பங்குக்கு அதிகப்படுத்த உதவியது.

ஸ்பீல்பெர்க் - உலகம் முழுவதுமுள்ள ரசிகர்களை இந்த ஒரே படத்தின் மூலம் அதிகமாகக் கவர்ந்தார்.

இதேபோல், 1977 இல் வெளிவந்த அவரது 'குளோஸ் கௌன்டர்ஸ் ஒவ் தி தேர்ட் கைன்ட்' படத்தையும் குறிப்பிடலாம்.

இதில் - மனிதர்கள், எதிரியின் பலம் தெரியாத, அறிந்துகொள்ள முடியாத வேற்றுக் கிரகவாசிகளுடன் மோதினர். கொலம்பியா நிறுவனம் தயாரித்த இந்தப்படம், வெளியான முதல் வருடத்திலேயே எழுபத்தேழு மில்லியன் டொலரை வசூலித்தது.

ஒரு தம்பதியர் காரில் வந்துகொண்டிருக்கும்போது, வானில் சட்டென்று ஓர் ஒளிப்பிளம்பு தோன்றுகிறது. இது ஒரு பறக்கும் தட்டு. நிதானித்துத் திரும்பப் பார்ப்பதற்குள் பறக்கும் தட்டு மறைந்து விடுகிறது. மற்றும் சிலரும் பறக்கும் தட்டைப் பார்த்ததாகக் கூறுகின்றனர். அன்று அவர்களால் நிம்மதியாக உறங்க முடியவில்லை.

## ஸ்டீபன் ஸ்பீல்பெர்க்

சற்றுநேரத்தில், மெலின்டா என்பவளது வீட்டைப் பறக்கும் தட்டுக்கள் சுற்றிவளைத்துக் கொள்கின்றன. மூடிய கதவையும் மீறி பறக்கும் தட்டுக்காரர்கள் அவளது மகனைக் கைப்பற்றிக் கொண்டு செல்லுகின்றனர். பிரமை பிடித்து அப்படியே உறைந்து விடுகிறாள் மெலின்டா. செய்தி பரவுகிறது.

மீண்டும் பறக்கும் தட்டுக்கள் வருகின்றன. அரச விஞ்ஞானிகள் பறக்கும் தட்டுவாசிகளுடன் தொடர்புகொள்ள முயலுகின்றனர். ஒரு விதமாகத் தொடர்புகொண்ட அவர்கள், சமரசத்துக்கு உடன்படுகின்றனர். அதுவரை பிடித்துப்போன மனிதர்களைத் திரும்ப ஒப்படைக்கவும் பறக்கும் தட்டுக்காரர்கள் ஒப்புக்கொள்கின்றனார்.

பிரம்மாண்டமான பறக்கும்தட்டு இறுதியில் தரையிறங்குகிறது. மனிதர்கள் அதிலிருந்து விடுதலையாகின்றனர். மெலின்டாவின் மகனும் அதிலிருந்து இறங்குகிறான். பறக்கும் தட்டுக்காரர்கள் பூமியில் வசிப்பவர்களிடம் நட்புறவை நாடிவந்ததைத் தெரிவிக்கின்றனர். படத்தின் கடைசி நாற்பது நிமிடங்கள், பரபரப்பாகப் பார்வையாளர்களை தவிக்கச் செய்கின்றன.

இந்தப் படத்தின் ஒளிப்பதிவு குறிப்பிட்டுப் பேசப்பட்டது. உயர்ந்த பட்ச கமரா உத்திகளையும், விஞ்ஞான வசதிகளையும் படத்தில் பயன்படுத்தியிருந்தனர். சிறந்த ஒளிப்பதிவுக்கான 'ஒஸ்கார்' விருதை படத்தின் ஒளிப்பதிவாளரான வில்மோஸ் சிக்மண்ட் பெற்றார்.

பதினோரு மில்லியன் டொலர் செலவில் திட்டமிடப்பட்டிருந்த இந்தப் படத்தின் தயாரிப்பு, இறுதியில் பத்தொன்பது மில்லியன் டொலரை எட்டியது.

1980 ஆம் ஆண்டில், மேலும் சில பகுதிகளைச் சேர்ந்து ஸ்பீல்பெர்க் இதே படத்தை மீண்டும் வெளியிட்டபோது, மேலும் அறுபது லட்சம் டொலரைச் சம்பாதித்தது.

அதுவரை வந்த அமெரிக்கப் படங்கள், வேற்றுக் கிரகவாசிகளால் மிரட்டப்படுவதாக இருக்க, இந்தப் படம் அவர்களை நட்புறவுடன் நெருங்கியது.

குறிப்பிடத்தக்க மற்றொரு படமாக 1982 இல் வெளியான 'தி எக்ஸ்ட்ரா ரெரஸ்ட்ரியல்' (ஈ.ரி.) படத்தையும் குறிப்பிடலாம். இதுவும் வேற்றுக் கிரகம் தொடர்பான ஒரு கதைதான்.

பறக்கும் தட்டு ஒன்று வேற்றுக் கிரகத்திலிருந்து பூமிக்கு வருகிறது. அமெரிக்காவின் விண்வெளித்துறையினர் அந்தப் பகுதியை அவசர அவசரமாகச் சுற்றி வளைத்தவுடன், பறக்கும் தட்டு விர்ரென்று மேலெழும்பிப் பறந்து விடுகிறது. அதிலிருந்து இறங்கிய அந்நியப் பிறவி ஒன்று, கலி.்.போர்னியா நகரைச் சேர்ந்த

## பகுதி 03

ஒரு குடும்பத்துச் சிறுவர்களால் காப்பாற்றப்படுகிறது.

ஏறத்தாழ மனிதனை மாதிரியே படைக்கப்பட்ட இந்த அந்நியக்கிரக அதிசயப்பிறவி, மனித உணர்வுகளையே பிரதிபலித்தது. பிரிவு, நேசம், தோழமை சட்டென்று சூழ்நிலையைக் கிரகித்தல் போன்றவை அந்தப் பிறவியின் இயல்பாக இருந்தது.

ஈ.ரி.-யை அரவணைத்து ஆதரிக்கும் சிறுவன் இலியட்தான் படத்தின் முக்கிய கதாபாத்திரம். இலியட், நெருக்கமான நண்பனாகி ஈ.ரி.-க்கு உதவுகிறான். தந்தையைப் பிரிந்து வாழும் இலியட், அதன்மீது அன்பு செலுத்துகிறான்.

ஈ.ரி. தனது சொந்தக் கிரகத்துக்குச் செலல, முதலில் சரியான தகவல் தொடர்பு தேவைப்படுகிறது. அதற்குச் சிறுவன் உதவுகிறான். பின்னர் அங்கிருந்து வரும் பறக்கும் தட்டு ஈ.ரி. - யைச் சுமந்து செல்கிறது.

இலியட் என்கிற சிறுவனுக்கும் ஈ.ரி. - க்கும் இடையே ஏற்பட்ட நட்பும், அதனால் விளையும் சம்பவங்களும் படத்தின் வெற்றிக்கான காரணம் எனலாம்.

பறக்கும் தட்டு புறப்படப்போகும் சமயத்தில் - "நீ இங்கேயே இரு!" என்கிறான் இலியட், "நீ என்னுடன் வந்துவிடு!" என்



'சேவிங் பிறைவேற் றயன்' படத்தில் ஒரு காட்சி

கிறது ஈ.ரி. அந்த அளவுக்குப் பிரியமுடியாத நண்பர்களாகி விடுகின்றனர் இருவரும்.

ஈ.ரி. என்கிற உருவத்தை உருவாக்கித் தந்தவர் கார்லோ ரம்பால்டி என்பவர். படத்தின் இசையமைப்பாளர் ஜோன் வில்லியம்ஸ், கார்லோ ரம்பால்டி, தந்திரக்காட்சி அமைப்பாளர் டென்னிஸ் முரேன், கென்னத் எ.்.ப். ஸ்மித் ஆகியோருக்கு இந்தப் படத்துக்கான 'ஒஸ்கார்' விருதுகள் கிடைத்தன. ஏறத்தாழ இரண்டு மணி நேரம் (155 நிமிடம்) ஓடும் இந்தப் படமும், வசூலில் முந்தைய சாதனைகளை முறியடித்தது.

(தொடரும்)

# செவ்வாயை நோக்கி விரையும்



செவ்வாய்க் கிரக ஆய்வுக்காக, இரண்டு ரோபோ ஆய்வு வாகனங்களைச் சுமந்தபடி- அமெரிக்காவின் டெல்ரா - II விண்கலம், கடந்த செவ்வாயன்று புளோரிடாவின் கேப்க னாவரல் விமானத்தளத்திலிருந்து புறப் பட்டது. கடந்த ஞாயிறும், பின்னர் திங்களும் விண்கலம் செலுத்தும் பிரதேசத்தில் காணப் பட்ட சீரற்ற காலநிலையால், இரு தடவை இது புறப்படுவது தாமதிக்கப்பட்டது.

டெல்ரா எடுத்துச்சென்ற 'ஸ்பிரிட்' விண் கலம், இந்து சமுத்திரத்திற்கு மேலாக தனி யாக பிரிந்து விண்பாதையினுள் நுழைந்தது.

செவ்வாய்க் கிரகத்திற்கு ஐரோப்பிய விண்

## அமெரிக்க, ஐரோப்பிய விண்கலங்கள்

வெளி ஆய்வகம், தனது 'மார்ஸ் எக்ஸ்பிரஸ்' விண்கலத்தை அனுப்பி சிறுகால இடைவெளி யில் அமெரிக்காவும் செவ்வாய் ஆய்வுக்கான தனது விண்கலத்தை அனுப்பியுள்ளது. ஐரோப் பாவின் 'மார்ஸ் எக்ஸ்பிரஸ்' - தற்போது பூமியிலிருந்து ஒரு மில்லியன் கிலோமீற்ற ருக்கு அப்பால் செவ்வாயை நோக்கி விரைந்து கொண்டிருக்கிறது. ஆறு மாதகாலங்களில் இது செவ்வாயைச் சென்றடையும். மனித வரலாற்றில் பூமிக்கும் செவ்வாய்க்கும் இடையிலான அதிக நெருங்கிய தொடர்புகள் ஏற்படுத் தப்படுவதுடனேயே 2004 ஆம் ஆண்டு பிறக்கவுள்ளது.

# 'நாஸா'வின் புதிய பாதுகாப்பு ஏற்பாடுகள்



கொலம்பியாவின் இழப்பைத் தொடர்ந்து- விண்கலங்கள் விடயத் தில், 'நாஸா' புதிய அணுகுமுறைகளைக் கடைப்பிடிக்கத் திட்டமிட்டுள் ளது. பகல் வேளைகளில் மட்டும் விண்கலம் ஏவும் நடவடிக்கையை மேற்கொள்வது, பறப்புத்தூரத்தை கட்டுக்குள் வைத்திருத்தல், விண் வெளியில் வைத்தே அடிக்கடி விண்கலங்களைப் பரிசோதிக்க விண் வெளி வீரர்களுக்குப் பயிற்யளித்தல் என்பவை புதிய திட்டத்தினுள் அடங்குகின்றன.

'நாஸா' தனது பறப்பு முயற்சியை மீண்டும் இவ்வாண்டு டிசம்பர் முதல் அதிகரிக்கவுள்ளது. கொலம்பியாவின் வெப்பப் பாதுகாப்புத் தகட்டில் முதலே ஏற்பட்ட வெடிப்பே பேரழிவுக்குக் காரணமாக அமைந்ததால், விண்கலங் களை எதிர்காலங்களில் அனுப்ப முன்பு, கடும் பரி சோதனைக்கு உட்படுத்த 'நாஸா' அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர். அதேபோன்று விண்கலங்கள் புறப்படும் போது, ஏராளமான விடியோ கமராக்கள் மூலம் கலத் தின் மேற்பரப்பின் ஒவ்வொரு பகுதியும் கண்காணிக் கப்படவுள்ளது.



# கமரா தொலைபேசிகளுக்கு அவுஸ்திரேலியாவும் தடை



அவுஸ்திரேலியாவில், நீச்சல் குளங்கள் மற்றும் உடற்பயிற்சி மையங்கள் என்ப வற்றில், கமராவுடன் கூடிய செல்லிடத் தொலைபேசிகள் பாவிக்கப்படுவது தடை செய்யப்பட்டுள்ளது. இம்மையங்களில், இந்தவகைத் தொலைபேசிகள் தவறாகப் பயன்படுத்தப்படுவதாக எழுந்த குற்றச் சாட்டுக்களையடுத்தே இந்நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இதன்படி - நீச்சல் தடாகம் மற்றும் அதையண்டிய உடை மாற்றும் பகுதி என்பவற்றினுள் இந்த வகை தொலைபேசிகளை எவரும் எடுத் துச் செல்லமுடியாது.

இத்தகைய இடங்களில் - இந்த கமரா உள்ள தொலைபேசிகளைக் கொண்டு நிர்வாணப் படங்களை சிலர் எடுத்துத்தள்ளுவதாக புகார் கிடைப்பதாக அவுஸ்திரேலிய உயிர்காப்பு மையத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

ஜப்பானிலும் - உடல் அழகு நிலையங்களில், இத்தகைய செல்லிடத் தொலைபேசிகளைப் பாவிப்பதற்குத் தடைவிதித்துள்ளது. இதேபோன்றே - இத்தாலி, வடஅயர்லாந்து, சவூதி அரேபியா போன்ற நாடுகளிலும் இவற்றுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

# அருகும் 'கொட்' மீனினங்கள்

பிரிட்டனில் - அதிகரித்த மீன்பிடியினால் அதன் கரையோரப் பகுதிகளில் Cod வகை மீனினங்கள் அருகிவிட்டன. இதனால் - இவற்றின் தொகை அதிகரிக்கும்வரை, இவற்றைப் பிடிப்பதைத் தடை செய்யும்படியான கோரிக்கைகள், பிரிட்டனில் வலுத்துள்ளன. பிரிட்டிஷ் கடலில் - விஞ்ஞானிகள் எதிர்பார்த்ததையும்விட, மிகமோசமாக இந்த Cod வகை மீனினங்கள் அருகி வருவதாகச் சர்வதேச கடல் ஆய்வுகளுக்கானசபை எச்சரித்துள்ளது. பிரிட்டனின் வடகடல் மற்றும் டென்மார்க் முதல் சுவீடன் வரையிலான கடற்பிரதேசமும், அயர்லாந்து கடற்பகுதி என்பவற்றிலும் நிர்ணயித்திருந்த தொகை யிலும்விட, குறைவாகவே இந்த மீனினங்கள் தற் போது காணப்படுகின்றன.



# பிரிட்டனும் நகர்கிறது

செயற்கைக் கோள்களைப் பூமிக்கு நேராக நிலை நிறுத்திவைத்து (Global positioning) ஆராய்வுகள் ஆரம்பித்த காலத்தில் - அது இராணுவத் தேவை களுக்கும், விமானங்கள் மற்றும் கப்பல் கள் செலுத்துவதற்குமே பயன்படும் எனக் கூறப்பட்டது. ஆனால், இப்போது இதன்மூலம் வானிலை, கடல்மட்டம், கண்டங்களின் இடப்பெயர்ச்சி என்ப வற்றையும் அறிய முடிகி றது.



நகர்வு பற்றிய ஆய்வு



பிரிட்டனில் இத்தகைய 50 நிலையங்கள் உள்ளன. இவற் றின் ஆராய்வுகளிலிருந்து- பிரிட்டன், வருடாந்தம் 2 முதல் 3 சென்ரிமீற்றர் வரையில் வட - கிழக்காக, கண்ட நகர்வினை மேற்கொள்வதாக அறியப்பட்டுள்ளது. கடல் மட்டமும், கடந்த நூற்றாண்டு காலப்பகுதியில் 10-20 செ.மீ உயர்ந்துள்ளதும் அறியப்பட்டுள்ளது.

# நோர்வேயின் திமிங்கல வேட்டை



வேட்டைக்குத் தயார்

சர்வதேச தடையை மீறி, திமிங் கல வேட்டையில் நோர்வே ஈடுபடு வதாக, பிரிட்டன் குற்றஞ்சாட்டியுள் ளது. இவ்வாண்டு - நோர்வே இதுவரை 711 திமிங்கலங்களை வேட்டையாடி யுள்ளது. கடந்த ஆண்டு, இத்தொகை 634 ஆக இருந்தது. 1986 இல் நோர்வேயும் திமிங்கல வேட்டைத் தடை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டி ருந்தமை குறிப்பிடத்தக்கது. நோர்வே- திமிங்கல வேட்டையை தனது ஏற்று மதி வளர்ச்சிக்காகவே முழுமையாக மேற்கொள்வதாக பிரிட்டன் குற்றஞ்சாட்டுகிறது.

நோர்வே - இதுவரை சுமார் 70 தொன் திமிங்கல இறைச்சி, அதன் எண்ணெய் என்ப வற்றை, ஐஸ்லாந்து மற்றும் Faeroe தீவுக ளுக்கு ஏற்றுமதி செய்கிறது. ஜப்பானுக்கும் விரைவில் ஏற்றுமதி நடக்கவுள்ளது. ஜப் பானும் திமிங்கல வேட்டையில் ஈடுபடுவதாக இதுவரை குற்றஞ்சாட்டப்பட்டு வந்தது. எனி னும், தான் ஆராய்ச்சிகளுக்காகவே திமிங்கல வேட்டை நடத்துவதாக ஜப்பான் கூறிவரு கிறது.





பலியான திமிங்கிலம்

# மூதாதை மண்டையோடு மீட்பு



மனிதனின் மூதாதைகளின் இருப்பைத் தேடி நடந்துவரும் ஆராய்ச்சிகளின் முக்கிய கட்டமாக- எதியோப்பியாவில் அண்மையில் மீட்கப்பட்ட மூன்று மனித மண்டையோட்டுப் படிமங்கள் (Fossilised Skulls) காணப்படுகின் றன. கண்டுபிடிக்கப்பட்ட இரண்டு பெரியவர் களினதும், ஒரு குழந்தையினதும் மண்டை யோட்டுப் படிமங்கள் - 1,60,000 ஆண்டுகள் பழமையானவை. இது நவீன Homo Sapiers இனத்தின் மூதாதையாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

இவற்றில் மேற்கொள்ளப்பட்ட பிறப்புரிமையியல் பரிசோதனைகளில் இருந்து, இவர்கள் ஆபிரிக்க வம்சாவளிகள் என்பது உறுதியாகியுள்ளது. இதனால், மனித தோற் றத்தின் ஆதிமூலமாக ஆபிரிக்காக் கண்டமே இருந்துள்ளது என்பது உறுதியாகியுள்ளதாக, இவற்றை மீட்ட ஆய்வுக்குழுவின் உதவித் தலைவர் பேராசிரியர் ரிம்வைட் கூறுகிறார்.



இம்மண்டையோட்டுப் படிமங்களை ஆராய்ந் ததன் மூலம், இவை பெரியவையாகவும், நீண்டவையாகவும், கண் இமைப் பகுதி என்பு துருத்தியதாகவும் இருந்திருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

# நவீன பயிர்ச்செய்கைக்கு சிபார்சு

பிறப்புரிமையியல் ரீதியாக நவீன மயப்படுத்தப்பட்ட பயிரினங்கள், வளர்முக நாடுகளின் விவசாயத்தை அதிகரிக்கச் செய்யும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஐரோப்பாவில் இத்தகைய பயிர்ச்செய்கை மூலம் அதிக விளைச்சல் தற்போது பெற்றுக்கொள்ளப்படுவதாகக் கூறப்படுகிறது.

பிரிட்டனில் நடைபெற்ற பிறப்புரிமையியல் தொழில்நுட்பக் கருத்தரங்கில், இது தொடர்பான ஆய்வறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், மிகவும் வறியநாடுகளும் பயன்பெறலாம் என இந்த அறிக்கை சிபார்சு செய்கிறது.

ஆனால், அதேசம யம் இத்தகைய பிறப் புரிமையியல் மாற்றுப் பயிர்ச்செய்கையினால், உடல்நலத்திற்கு தீங்கு ஏற்படுவதாகக் குற்றச் சாட்டுகள் - தற்போது அபிவிருத்தியடைந்த நாடுகளில் கிளப்பப்பட்டு வருகின்றன. இத்தகைய எதிர்ப்பினால் வளர்முக நாடுகளும் பாதிப்புற லாம் என இந்த ஆய் வறிக்கை கூறுகிறது.



நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*மிகல்மேவல் மெய்ப்பொருள் காணார் இகல்மேவல்
இன்னா அறிவி னவர்.*

\- திருக்குறள்.

# நமது நோக்கு

## மீளாப் புதைகுழிக்குள்...!

இராணுவத்தை விட்டு 60 ஆயிரத்திற்கும் அதிகமானோர் தப்பியோடியிருக்கும் நிலையில் - அவர்களை மீளத் திருப்பி அழைக்கவோ, கட்டுப்படுத்தவோ முடியாத கையறு நிலைக்கு அரசாங்கம் ஆளாகியிருக்கிறது.

பல ஆண்டுகளாகத் தொடர்ந்த யுத்தத்தில் - அளவுக்கு மிஞ்சிய வீதத்தில் பெருத்துப்போன அரசாங்கப் படைகளில்- தகுதியற்றும், தராதரமற்றும் எழுந்தமானமாக இணைத்துக் கொள்ளப்பட்ட ஏராளம் சிங்கள இளைஞர்கள் - போரின் வெம்மை தாங்கமுடியாமல், தமது பணம் திரட்டும் ஆவல் யாவும் கருகிப்போனவர்களாகப் படைகளைவிட்டுச் சொல்லிக் கொள்ளாமல் தப்பியோடிவந்தனர்.

இராணுவத்தில் பெருமளவில் இணைந்துகொண்ட - கீழ்மத் தியதரவர்க்க, வறுமைநிலையிலுள்ள சிங்கள இளைஞர்களைப் பொறுத்தளவில் - அவர்களுக்கான குறிக்கோள், வழங்கப்படும் வேதனத்தின் மீது இருந்ததேதவிர - அவர்களுக்கென அரசியல் இலக்குகளோ, வேறு இலட்சியங்களோ காணப்படவில்லை.

அரசாங்கம், கவர்ச்சிகரமாக அறிவித்த சம்பளத் திட்டங்களும் - போரின் யதார்த்தம் புரியாத தன்மையும் இந்தச் சிங்கள இளைஞர்களைச் சீருடை அணிவித்து, ஆயுதம் தாங்கி, வட- கிழக்கிற்கு அனுப்பிவைக்கப் பேருதவி செய்தன.

ஆனால் - உண்மைநிலையைச் சந்தித்தபோதும், நேருக்கு நேர் அனுபவங்களைப் பெற்றபோதும் - இது உயிருடனான விளையாட்டு என்ற யதார்த்தம் சிங்கள இளைஞர்களை அச்சமூட்டியது.

வெறும் பணத்துக்காகப் போரிடுபவர்கள் ஒருபுறம், இலட்சிய தாகத்துடன் மண்மீட்க, மக்களைக் காக்கப் போராடுபவர்கள் மறுபுறமுமாக - போர்க்களங்கள் கொதிநிலை அடைந்தபோதே - சிங்கள இளைஞர்களுக்குப் பொறிதட்டத் தொடங்கியதால்தான் - அவர்கள் தப்பியோடும் யோசனைகளைக் கைவரப்பெற்றார்கள்.

தேசிய சமாதானப் பேரவையின் நிகழ்ச்சித்திட்ட அதிகாரியான அகிம்சக பெரேரா, இரு தினங்களுக்கு முன்னர் கொழும்பில் நடந்த, போருக்கு எதிரான இயக்கத்தின் கருத்தரங்கில் உரையாற்றியபோது கூறியதை இங்கு குறிப்பிடலாம்.

'யுத்த களத்தில் புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் பாரிய வித்தியாசம் உள்ளது. இராணுவத்தினர் குறிக்கோளுடன் போராடுவதில்லை. அவர்கள் வருவாயைத் தேடிக் கொள்ளவே இராணுவத்தில் சேர்கின்றார்கள்.

ஆனால், புலிகள் அமைப்போ - தமது மண்ணைக் காப்பாற்றிக்கொள்ள ஒரு குறிக்கோளுடன் போராடுகின்றது' என்றார் அவர்.

இந்தச் சூழலில் - விடுதலைப் புலிகளின் தாக்குதிறனும், அபாரமான வெற்றிகளும் - திகிலூட்டிய கணக்கில்தான், ஆயிரக்கணக்கான படையினர் தப்பியோடுவதற்கான நிர்ப்பந்தத்தைப் பெற்றனர்.

இராணுவத்துக்கு - இது அவமானகரமான விடயம் என்பது மட்டுமல்ல, தொடர்ந்து படைகளுக்கான ஆட்திரட்டலையும் அது பாதித்தது.

அதேவேளை - தப்பியோடிய படையினரும், அவர்கள் எடுத்துச்சென்ற ஆயுதங்களும் இன்னுமொரு புதிய தலைவலியைத் தெற்கில் தர ஆரம்பித்தன.

படைகளில் இருந்தபோது ஆயுதங்களைக் கையாளத் தெரிந்தோர் - வீடுகளைச் சென்றடைந்த பின்பும், தலைமறைவு வாழ்க்கையில் ஈடுபடத் தொடங்கியதன் பின்னரும் கைகளைக் கட்டிக்கொண்டு சும்மாயிருக்கவில்லை.

வழிமறிப்பு, திருட்டு, பாலியல் குற்றங்கள், போதைப் பொருள் விற்பனையும் கடத்தலும் எனத் தொடங்கி - ஒப்பந்தத்துக்கு ஆட்களைக் கொல்லும் பாதாள உலகக் கோஷ்டிகளில் மிகப் பெரும்பான்மையினராக, முக்கிய நபர்களாக தப்பியோடிய இராணுவத்தினர் உருமாறினர்.

அரசாங்கம் பொதுமன்னிப்பு அறிவித்தும் - அவர்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பவில்லை. அவர்கள் கைக்கொண்ட வாழ்க்கை - இராணுவ அனுபவங்கள் வாயிலாகவும், பின்னர் சட்டவிரோத வாழ்வு வழியாகவும் - பிரியமுடியாத பிணைப்பையே அவர்களுக்கு ஏற்படுத்தியது.

இதன்பேரில்தான் - உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க -

'தப்பியோடிய படையினருக்கு மீண்டும் மீண்டும் பொதுமன்னிப்புக் கொடுத்தபோதும், அவர்களைப் பணிக்குத் திரும்ப வைக்க முடியவில்லை. இந்த விடயத்தில் நாம் தோற்றுவிட்டோம்' எனப் பகிரங்கமாக அறிவித்திருக்கிறார்.

இப்போது தப்பியோடிய படையினரை மீள அழைப்பதை விடுத்து - அவர்களைப் பதிவுசெய்து சான்றிதழ் வழங்கும் நிலைக்கே அரசாங்கம் வந்திருக்கிறது.

இதன் முதற்கட்டம் - கம்பஹா மாவட்டத்தில் செயற்படுத்தப்படவிருப்பதாக மேஜர் ஜெனரல் ஐவன் தசநாயக்க கூறியிருக்கிறார்.

இந்தப் பரிசோதனை முயற்சி வெற்றியளிக்கும் பட்சத்தில்- தப்பியோடியோரைப் பற்றிய இறுதித் தகவல்களைத் திரட்டி, ஓரளவேனும் அவர்களைக் கண்காணிப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கும் என்பது திண்ணம்.

ஆனால் - இத்திட்டம் வெற்றியளிக்குமா என்பதும் கேள்விக் குறியே. பொதுமன்னிப்புக்கே மசியாதவர்கள் - தம்மைப் பற்றிய விபரங்களை அள்ளிக்கொடுக்க, தமது மறைவிடங்களிலிருந்து வெளியே வந்து சான்றிதழ்களைப் பெறவா விரும்புவார்கள்?

ஒட்டுமொத்தத்தில், போரின் மறைமுகத்தாக்கம் - இன்னமும் சில்லெடுப்பைத் தருவதாகவே அரசாங்கத்தைப் பிடித்து ஆட்டுகின்றது என்பது மட்டும் உறுதியானது.

இந்தநிலையில் - மறுபடியும் போர் மூளக்கூடிய சந்தர்ப்பங்களைத் தேடியே அரசாங்கம் நகருமானால் - இனி எப்போதைக்குமே மீட்சியில்லாத நரகக்குழியாகவே தென்னிலங்கை மாற்றப்பட்டுவிடும் என்பது மட்டும் அறுதியாகச் சொல்லக்கூடியதாகும்.

# இதுவரை காட்டிய பொறுமை போதும் இலட்சிய பயணத்தைப் புடம்போடுங்கள்!

## முல்லைத்தீவு கடலோர மக்கள் பிரபாவுக்கு கடிதம்



"மானமும் சுயகௌரவமும் இழந்த மக்களல்ல, உங்கள் மக்கள். இதற்கு மேலும் சர்வதேச சமூகத்திடமோ, சிங்கள அரசிடமோ நீதியும் நியாயமும் வேண்டி நிற்கும் அளவுக்கு நீங்கள் இருக்கக்கூடாது. இதுவரை நீங்கள் காட்டிய பொறுமையும் விட்டுக்கொடுப்பும் போதும்."

\- இவ்வாறு முல்லைத்தீவு கடலோரப் பிரதேச மக்கள் - தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரனுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. சர்வதேசக் கடற்பரப்பில் புலிகளின் கப்பல் தாக்கி மூழ்கடிக்கப்பட்டதையடுத்து, இந்தக் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

தமிழ்மக்கள் மனங்களெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கும் எம் தலைவனே, நிதானத்தோடு எங்கள் வேண்டுதலை விடுக்கின்றோம். 27 ஆண்டு கால விடுதலைப்போரில் எமது மக்கள் பட்ட துயரத்திற்கும், துன்பங்களிற்கும் ஓய்வு கொடுக்க நீங்கள் விரும்பியதை நாங்கள் அறிவோம், 17,800 இற்கு மேற்பட்ட மாவீரர்களின் இலட்சியக் கனவுகளையும், 70,000 இற்கு மேற்பட்ட மக்களின் உயிர்களையும், இவர்கள் சிந்திய குருதியையும், கண்ணீரையும் உங்கள் உள்ளம் தாங்கி உறுதியோடு இருப்பதையும் நாங்கள் அறிவோம்.

எமது மக்களின் அமைதியான, நிம்மதியான, சுதந்திரமான வாழ்வுக்காக - நோர்வேயின் அனுசரணையுடன் அரசியல் தீர்வு ஒன்றைக் காணமுடியுமா என, 16 மாதங்களாய் நினைத்ததையும் நாங்கள் அறிவோம். புரிந்துணர்வு உடன்படிக்கை மூலம் உலக நாடுகளுக்கு நாங்கள் பயங்கரவாதிகள் அல்ல என்பதை உணர்த்தியதையும், உண்மையான பயங்கரவாதிகள் யார் என்ற உண்மையை வெளிப்படுத்திய முறையினையும் நாங்கள் அறிவோம். இதற்காக - இந்த 16 மாதங்கள் சிங்கள அரசும், படைகளும் செய்த அடாவடித்தனங்களையும், அட்டூழியங்களையும், அழிப்பு நடவடிக்கைகளையும், இழக்கக்கூடாத இழப்புக்களையும் நீங்கள் பொறுத்து மௌனமாக இருந்தீர்கள். இதற்கு முன்- கண்ணீர் சிந்தி, காத்து வளர்த்து வந்த விடுதலைப்போரை இடைநிறுத்தி, விட்டுக் கொடுக்க முடியாத - விட்டுக் கொடுக்கக் கூடாத இடங்களெல்லாம் விட்டுக்கொடுத்துப் போனீர்கள். ஆனால் - சிங்கள அரசுப்படைகளும், ஏன் உலக நாடுகளும் கூட எமது இனத்தின் தன்மானத்தில், சுயகௌரவத்தில், சுதந்திரஉணர்வில் கத்தி வைத்துவிட்டார்கள். எங்களை ஏமாளிகளாக எண்ணிச் செயற்பட முற்பட்டுவிட்டார்கள். நெடுந்தீவுப் பகுதியில் எமது போராளிகளின் உயிர்கள் அநியாயமாக அழிக்கப்பட்டபோது மௌனமாக இருந்தீர்கள். பண்பாட்டின் உயிர்நாடியாய், ஈழத்தின் பிறப்பிடமாய் நின்ற எம் பெண் போராளிகளை, சிங்களப்படை ஆடைகளைக் கிழித்து, இடுப்புப் பட்டிகளை அறுத்து அவமானப்படுத்தியபோதும் அமைதியாக இருந்தீர்கள்.

காஞ்சிரங்குடாவில் - உங்களை உயிராய் மதிக்கும் மக்களை அதிரடிப்படையினர் நாயிலும் கேவலமாகச் சுட்டுக்கொன்றபோது பொறுமையைக் கடைப்பிடித்தீர்கள். எமது விடுதலைப் போரில் முதுகெலும்பாய் வளர்ந்து நிற்கும் கடற்புலிகள் படையின் கப்பலையும், அதில் பயணித்த கப்பல் கப்டன் சிலம்பரசன் உட்பட 11 போராளிகளையும் சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து தாக்கியழித்தபோது, சகித்துக் கொண்டீர்கள். உங்கள் மௌனத்தை, அமைதியை, பொறுமையை, சகிப்பை சிங்கள அரசும், படைகளும் புரிய மறுத்தார்கள். இது மட்டுமல்ல - புரிந்துணர்வு உடன்படிக்கையையும், அமைதிக்காலத்தையும் பயன்படுத்தி, எமது பலத்தின் ஆணிவேரில் கைவைக்கத் தொடங்கியுள்ளார்கள். அதன் வெளிப்பாடாகவே கடந்த 14 ஆம் திகதி சனிக்கிழமை மீண்டும் சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து எமது கப்பலைத் தாக்கி மூழ்கடித்து, அதில் பயணித்த போராளிகளையும் கைது செய்துள்ளார்கள்.

இதற்குப் பின்பும் - சர்வதேச சமூகத்திடமோ, சிங்கள அரசிடமோ நீதியும், நியாயமும் வேண்டி நிற்கும் அளவிற்கு நீங்கள் இருக்கக் கூடாது. இதுவரை நீங்கள் காட்டிய பொறுமையும், விட்டுக்கொடுப்பும் போதும். மானமும், சுயகௌரவமும் இழந்த மக்கள் அல்ல, உங்கள் மக்கள். இலட்சியத்துக்காக உயிரைத் துச்சமாக மதிக்கும் பிள்ளைகளைத்தாம் நாங்கள் போருக்கு அனுப்பி வைத்தோம். இனியும் அனுப்பி வைப்போம். உங்கள் முடிவை மாற்றி, இலட்சியப் பயணத்தின் பாதையை மீண்டும் புடம்போட்டுக் கொள்ளுங்கள். உங்கள் பலமாய் நாங்கள் இருப்போம் என அச் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

# வாழைச்சேனை கிரனைட் வீச்சில் நான்கு பொதுமக்கள் காயம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - வாழைச்சேனை நகரில், முஸ்லிம் வர்த்தக நிலையம் ஒன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட கிரனைட் தாக்குதலில் நான்கு பேர் காயமடைந்தனர்.

நேற்று முன்தினம் முற்பகல் 10.45 மணியளவில்- வாழைச்சேனை நகரில் உள்ள சந்தையில், இறைச்சிக்கடை ஒன்றின் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

இந்தச் சம்பவத்தில் - சந்தையில் பொருட்கள் கொள்வனவில் ஈடுபட்டிருந்த நான்கு பொதுமக்கள் காயமடைந்தனர். இவர்கள் உடனடியாக மீராவோடை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இந்தக் கிரனைட் தாக்குதல் சம்பவம் நடைபெற்றதை அடுத்து, நகரிலிருந்த வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டதுடன்,

அப்பகுதியில் பெருமளவு இராணுவத்தினரும், பொலிஸாரும் குவிக்கப்பட்டனர்.

# ரோக்கியோ நிதியுதவிகள் குறித்து நாடாளுமன்ற அங்கீகாரம் பெறப்படும்!

ரோக்கியோ மாநாட்டில், இலங்கைக்குக் கிடைத்த நிதி உதவி சம்பந்தமாக நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்தப் பிரேரணை - இருவாரங்களுக்குள் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தப் பிரேரணை, ரோக்கியோ மாநாட்டில் கிடைக்கப்பெற்ற நிதியை விரைவில் ஆக்கபூர்வமாகச் செலவிடுவதற்கு வழிவகுக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியைச் செலவிடும்போது - அரசியற்குறுக்கீடுகள், முறைகேடுகள் இடம்பெறாமல் தடுப்பதற்கும் புதிய சட்டங்களை உருவாக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

உதவி வழங்கும் மாநாட்டில் கிடைத்த நிதியைப் பயன்படுத்துவதில், அரசியல் தலையீட்டைத் தவிர்க்கும்படி ஜப்பான் நாட்டு விசேட தூதுவர் யசுஷி அகாஷி - அரசாங்கத்துக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இதனாலேயே அரசாங்கம் நாடாளுமன்றத்தில் இதற்கான பிரேரணையை கொண்டுவர எண்ணியுள்ளது எனத் தெரிய வருகிறது.

# புலிகளுடன் தொடர்பிருப்பதான செய்திக்கு பஷீர் சேகுதாவூத் மறுப்பு!

விடுதலைப் புலிகளுக்கும் தனக்கும் தொடர்பிருப்பதாக "த ஐலண்ட்" பத்திரிகையில் வெளியான செய்திக்கு, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் பஷீர் சேகுதாவூத் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

மே 8 ஆம் திகதி 'ஐலண்ட்' நாளிதழில் வெளியான "அஷ்ரப் மரணம் விபத்தா? படுகொலையா?" என்ற கட்டுரையில், பஷீர் சேகுதாவூத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தொடர்பிருப்பதாகக் குறிப்பிட்டிருந்தது.

அஷ்ரப்புடன் ஹெலியில் சென்ற கதிர்காமத்தம்பி என்பவரை, பஷீர் சேகுதாவூத்தான் அஷ்ரப்புக்கு அறிமுகப்படுத்தி, தேசிய ஐக்கிய முன்னணி வேட்பாளர் பட்டியலில் சேர்த்ததாக அக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால் - கதிர்காமத்தம்பி தொடர்பாகத் தனக்கு எதுவும் தெரியாது என்றும், அவரை - தான் அஷ்ரப்புக்கு அறிமுகம் செய்து வைக்கவில்லை என்றும் பஷீர் சேகுதாவூத் மறுத்துள்ளார்.

கதிர்காமத்தம்பி பற்றி நான் அறிந்த ஒரே விடயம் - அவர அம்பாறை- வீரமுனையைச் சேர்ந்தவர் என்பது மட்டும்தான்.

நான் மட்டக்களப்பு - ஏறாவூரில் இருப்பவன். அவரைப்பற்றி வேறு எதுவுமே தெரியாது.

ஈரோஸ் உறுப்பினராக இருந்த நான், 1989 இல் சுயேட்சைக் குழுவாக ஈரோஸ் போட்டியிட்டபோது, நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவானேன். பின்னர் - முஸ்லிம் காங்கிரஸில் இணைந்து நாடாளுமன்ற உறுப்பினராக உள்ளேன்.

முஸ்லிம் காங்கிரஸின் காணிப்பிரச்சனைகள் தொடர்பாக ஆராயும் குழுவில் என்னையும் ஒரு பிரதிநிதியாகச் சேர்த்துள்ளனர். இந்த வகையில் இந்தக் கூட்டங்களில் கலந்துகொண்டு புலிகளுடன் பேச்சு நடத்தி வருகின்றேன். ஆனால், தனிப்பட்ட தொடர்புகள் எதுவும் அவர்களுடன் இல்லை என்றும் பஷீர் சேகுதாவூத் மேலும் தெரிவித்தார்.

# நான்கு வருடக் காலக்கெடுவுடன் அரசாங்கத்துக்கு சமாதான விலங்கு!

பல்வேறு சந்தேகங்களையும், சங்கடங்களையும் தாண்டி, அந்த நிதி உத்தரவாதம் வழங்கும் மாநாடு ரோக்கியோவில் ஆரம்பமாகியது. அடுத்த வருடத்திற்குள் எப்படியாவது சமாதானத்தைக் கொணர்வோம் என,


ஜப்பானியப் பிரதமர் கொய்சுமியுடன் கலந்துரையாடும் பிரதமர் ரணில்

வருடாவருடம் வாக்குறுதிகூறி, சிறிலங்கா நிதியுதவி பெற்றுவந்த ஒரு மாநாடே, தற்போதைய சமாதானப் பேச்சுக்களையொட்டி, இவ்வாறு திருவிழாக்கோலம் பூண்டது.

இறுதி நேரத்திலாவது தமிழர் தரப்பு கலந்துகொள்ளுமா என்ற எதிர்பார்ப்புக் கலைந்துபோன ஒரு நிலையில், மாநாட்டிற்கான இணைத் தலைமை என்கிற நிலைப்பாட்டிலிருந்து நோர்வே ஒதுங்க - இந்த நிதி உத்தரவாத மாநாடு கோலாகலமாகக் கடந்த ஒன்பதாம் திகதி ஆரம்பமானது. அதுகூட, தமிழர் தரப்பின் இடைக்கால நிர்வாகம் தொடர்பான கோரிக்கையை நிறைவேற்றுவோம் என்ற, உறுதிமொழியை சிறிலங்கா வழங்கியே - மாநாட்டை ஆரம்பிககு மளவிற்கு நிலைமை சென்றிருந்தது. தமிழர் தரப்பின் நிலைப்பாட்டில் நியாயம் இருப்பதை உள்வாங்குவதாக அமைந்திருந்த ரணிலின் ஆரம்ப உரையில் -

நாங்கள் ஏற்கனவே முன் வைத்த திட்டம் மிகவும் குழப்பகரமானதும், தமிழர் தரப்பு ஏற்றுக்கொள்வதற்குரியதுமல்ல என்பது இப்போது தெளிவாகியுள்ளது எனவும், பலதரப்பு அமைப்புக்கள் மற்றும் உதவும் நாடுகளின் உதவியுடன்(?) தாங்கள் புதிய கட்டமைப்பு ஒன்றை வடிவமைத்துள்ளோம் எனச் சாக்குக் குச் சொல்லியே மாநாட்டை ஆரம்பித்து வைத்தார்.

ஆனாலும், இந்த ரோக்கியோ-நிதி உத்தரவாதம் வழங்கும் மாநாடு, பல மயக்கங்களை மக்களிடையே விதைத்து நிற்கிறது. குறிப்பாக இலங்கைத்தீவிற்குக் கேட்டதற்கும் மேலாக நிதி கிடைத்துள்ளது என்ற மாயை, தென்பகுதியெங்கிலும் வியாபித்திருக்கிறது. ஆனால், இந்த மாநாடு பற்றிய ஆராய்வு - மேற்படி கூற்றிற்குப் புறம்பாக பல உண்மைகளை வெளிக்கொணர்வதாகவுள்ளது.

குறிப்பாக, 2006 ஆம் ஆண்டு வரையான, இந்த நான்கு ஆண்டுகளும் சிறிலங்காவிற்கான கடுமையான பரிசோதனைக் காலமாக அமையும் என்பதோடு, இடைக்கால நிர்வாகத்திற்கான கட்டமைப்பொன்றை தமிழர் தரப்பிற்கு வழங்கி, அதனூடே இறுதித் தீர்வை நோக்கிப் பயணிக்க வேண்டிய தேவையையும்- இந்த மாநாடு நிர்ப்பந்தமாக வழங்கியுள்ளது.

சிறிலங்காவிற்கான நிதியுதவி வழங்கும் மாநாடுகள் இதுவரைகாலமும், உலகவங்கியால் வருடாவருடம் நடத்தப்பட்டு வந்தது. இவ்வாறே 2003 ஆம் ஆண்டிற்கான மாநாடு, கடந்த டிசம்பரில் நடைபெறவிருந்த சமயமே, வட-கிழக்குப் புனரமைப்பிற்கான நிதித் தேவையின் அவசியம் உள்வாங்கப்பட்டு, நோர்வேயில் அதற்கான முதற்கட்ட மாநாடு நடத்தப்பட்டது.

கடந்த நவம்பரில் நடாத்தப்பட்ட இந்த மாநாட்டில், புனரமைப்பிற்கான பாரிய நிதி மாநாடொன்றை ரோக்கியோவில் நடத்துவதென்று முடிவு செய்யப்பட்டது. இத்தீர்மானத்தையடுத்து, உலகவங்கி கடந்த டிசம்பரில் நடைபெறவிருந்த வருடாந்த மாநாட்டைப் பிற்போட்டு, அதனை ரோக்கியோ மாநாட்டுடன் இணைப்பதென்று முடிவெடுத்தது.

இதை ஒரு சாதகநிலையாக எடுத்த சிறிலங்கா அரசு, வட-கிழக்குப் புனரமைப்பிற்கு நிதியைப் பெறும் அதேவேளை, 'இலங்கையை மீளக்கட்டியெழுப்புதல்' என்ற பெயரின் கீழான ஒரு திட்டத்தைத் தயாரித்து, நிதிவழங்குநர்களின் பார்வைக்குச் சமர்ப்பித்திருந்தது. சமாதானப் பேச்சுக்களை அடிப்படையாக வைத்து, தயாரிக்கப்பட்ட இத்திட்டம் மூன்று வருடங்களுக்கான "முற்கூட்டிய நிதி உத்தரவாதத்தை"க் கோரியிருந்தது. அத்திட்ட ஆராய்வை மேற கொண்ட உலகவங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் ஆகியன - கடந்த ஏப்ரல் மாதம் 18 ஆம் திகதி இது பற்றிய முடிவை அறிவித்தன. அதாவது - சமாதானம் முன்னெடுக்கப்பட்டால், வருடாந்தம் 1.15 பில்லியன் டொலர்கள் வழங்குவதற்கு பரிந்துரைத்திருந்தன.

இவ்வாறு மூன்று வருடங்களுக்குப் பரிந்துரைக்கப்பட்ட தொகையே, இப்போது நான்கு வருடங்களாக்கப் பட்டு - 4.5 பில்லியன்களாக உத்தரவாதமளிக்கப்பட்டுள்ளது. அதாவது, சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு, மேலதிக ஒரு வருடகால நீடிப்பு வழங்கப்பட்டு, சமாதானத்திற்கான நிபந்தனைகள் இறுக்கப்பட்டு, குறிப்பாக வட-கிழக்குப் பகுதிக்கான பணம், அப்பகுதிகளுக்கே நேரடியாக செலவு செய்யப்படவேண்டும் என்ற நிபந்தனை இணைக்கப்பட்டு, இந்த முன்னுறுதி வழங்கப்பட்டுள்ளது. மறுபுறமாகச் சொன்னால், சமாதானப் பயணிப்பில் சிக்கல் ஏற்பட்டால், மேற்படி நிதியுதவி வழங்கும் நாடுகள் தமது முடிவை மீள்பரிசீலனை செய்யும். ஆகமொத்தத்தில் சிறிலங்கா - கடந்த ஆண்டுகளில் இந்த வருடாந்த நிதியுதவி வழங்கும் மாநாடுகள் மூலம், பெற்றுவந்த 800 மில்லியன் டொலர்கள் உதவியுடன், இப்போது மேலதிகமாக வருடாந்தம் சுமார் 325 மில்லியன் டொலர்கள் வருடாந்தம் பெறுகின்ற வாய்ப்பை பெற்றுத்தந்துள்ளது.

மறுபுறமாக, வருடாந்தம் சுமார் 450 மில்லியன்களை இதுவரை வழங்கி வந்த ஜப்பான், நான்கு வருடங்களுக்கென ஒரு பில்லியனை வழங்கியதன்மூலம், வருடாந்த உதவியை 330 மில்லியன்களாக ஆகக் குறைத்துள்ளது. அதுபோலவே - உலகவங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பனவும் கடந்த காலங்களில் வழங்கியதிலும் பார்க்க, குறைந்த தொகையையே வழங்கியிருக்கின்றன.

குறிப்பாக - உலகவங்கி வருடாந்தம் 200 மில்லியன் டொலர்களையும், ஆசிய அபிவிருத்தி வங்கி வருடாந்தம் 250 மில்லியன் டொலர்களையும், சர்வதேச நாணய நிதியம் வருடாந்தம் 125 மில்லியன்களையும், மேற்படி நான்கு ஆண்டுகளுக்குமான கடனாக உத்தரவாதமளித்திருக்கின்றன.

எனினும், எவ்வருடமும் இல்லாதளவிற்கு - இலங்கைக்கு நிதியுதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் - 51 நாடுகளும், 22 சர்வதேச அமைப்புக்களும் இவ்வருடம் கலந்துகொண்டிருந்ததானது, வருடாந்தத் தேவையாக பரிந்துரைக்கப்பட்ட 1.15 பில்லியன் டொலர்களின் மிகுதித் தொகையைப் பூர்த்தி செய்ய உதவின. அதுகூட, வட-கிழக்குப் புனரமைப்பிற்கான நிதி வரையறுக்கப்படும்போதே, இதுபற்றிய உண்மைநிலையை அறியமுடியும்.

ஏனெனில், இந்த மாநாட்டில் இரண்டாம் நாள் நிகழ்வில் உரையாற்றிய ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் - "இதுவரை இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட சமாதான நடவடிக்கைகளை நன்கு அவதானித்த பின்னரே, ஜப்பான் அடுத்த மூன்று வருடங்களுக்கும் 1 பில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கத் தீர்மானித்துள்ளது" எனத் தெரிவித்திருந்தார்.

இன்றுவரையும், சிறிலங்காவிற்கான முன்னணி உதவியாளராக இருக்கும் ஜப்பான் - இப்போது சமாதானத்தை ஏற்படுத்த நிர்ப்பந்திக்குமளவிற்குச் சென்றுள்ளதானது அல்லது சமாதானத்தை முன்வைத்து நிதியுதவியை எடைபோட முற்பட்டதானது - தமிழர் தரப்பின் பங்குபற்றுகையும், இன்றியமையாத பங்களிப்பும் நிச்சயமாகத்தேவை என்கிற உண்மையை உணர்த்தி நிற்கிறது.

இதுபோன்றே, நோர்வேயின் பிரதமர் அல்லது வெளிவிவகார அமைச்சர் கலந்துகொள்வார்கள். மாநாட்டிற்கு இணைத்தலைமை வகிப்பார்கள் என எதிர்பார்க்கப்பட்டபோதும், ரோக்கியோவிற்கு தனது தரப்பிலிருந்து முக்கிய இராஜதந்திரிகள் எவரையும் அனுப்பாமல், தனது இராஜாங்க அமைச்சின் செயலாளரையே நோர்வே அனுப்பி வைத்தது.




இது நிச்சயமாக விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டில் நியாயத் தன்மை இருப்பதையே எடுத்துரைத்து நின்றது. அவ்வாறு கலந்து கொண்ட இராஜாங்க அமைச்சின் செயலர்கூட, தமிழர் தரப்பு பங்குபற்றாத காரணத்தால், தாம் அனுசரணையாளர் என்ற ரீதியில் கலந்து கொள்ளாமல், உதவி வழங்கும் நாடுகளில் ஒன்றாகவே கலந்து கொள்வதாகத் தெரிவித்திருந்தார்.

அதேபோன்றே, ஜப்பானின் சிறப்புப் பிரதிநிதியான யசுசி ஆகாஷி கூட, வழங்கப்பட்டுள்ள உதவியில் கணிசமான தொகை, போரின் வடுக்களைச் சுமந்து நிற்கும் தமிழர் தாயகப் பிரதேசங்களுக்கே செலவிடப்படும் எனவும், இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கான இடைக்கால நிர்வாக ஏற்பாடொன்றுக்கு அரசாங்கமும், தமிழர் தரப்பும் ஒத்துவருகின்ற சந்தர்ப்பத்தில் - ஒதுக்கப்படும் தொகை பற்றிய ஒழுங்கான வரைபுகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்திருந்தார்.

இந்தச் செய்தியில் அவர் சொல்ல விளைந்த விடயம், வட-கிழக்கில் புனரமைப்பு மற்றும் நிர்மாணப்பணிகளை மேற்கொள்வதற்கு இடைக்கால நிர்வாகம் இன்றியமையாதது என்பதைத் தவிர, வேறு எதுவாகவும் இருக்கமுடியாது.

இதேபோன்று, இந்த நிதி வழங்கும் மாநாட்டின் இறுதியில் வெளியிடப்பட்ட தீர்மானங்கள் பல, சிறிலங்காவின் ஒருதலைப்பட்சமான விருப்புக்களை வெளிப்படுத்துபவை

கனடாவிலிருந்து
சுதர்மா

யாகவும், தமிழர் தரப்பைக் குறிபார்ப்பனவாக அமைந்திருந்தாலும், வடக்கு-கிழக்குப் பகுதிகளின் புனர்நிர்மாணம் மற்றும் புனரமைப்பு என்பனவற்றிற்காக ஒதுக்கப்பட்ட பணம், அந்தப் பகுதிகளுக்கே செலவு செய்யப்படுவது உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையையும், அத்தோடு - இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு குறித்து - இலங்கை அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் கூடிய விரைவில் பேச்சுக்களில் ஈடுபடவேண்டும் என்ற கருத்தையும் எமக்குச் சாதகமாக நாம் பயன்படுத்தலாம்.

ஆகமொத்தத்தில், தமிழர் தரப்பின் இன்றியமையாத பங்குபற்றுகையின் அவசியத்தைக் கட்டியம் கூறிய இந்த மாநாடு, சிறிலங்கா விரும்பிய உதவிகளுக்கே நிபந்தனைகளை விதித்து, உத்தரவாதம் வழங்கியுள்ளது. சுமார் 8 பில்லியன் டொலர்களை - வெளிநாட்டுக் கடனாகக் கொண்டுள்ள சிறிலங்கா தனது வருமானத்தில் ஒரு பெரியதொகையை- கடனை மீளச்செலுத்துவதற்கே இன்றும் உபயோகிக்கிறது.

சமாதானம் வந்துகூட, அதன் இரண்டாவது பெரிய செலவு, இன்றும்கூட பாதுகாப்புத்துறைக்கானதாகவே இருக்கிறது. இந்தநிலையில், கபடத்தைச் சுமந்தவாறு - ரோக்கியோவுக்கான காவடியாக்கப்பட்ட சமாதானம், தமிழர் தரப்பின் கனத்தை உலகிற்கு உணர்த்த மீண்டுமொருமுறை உதவியிருக்கிறது. ✪

## வவுனியாவில் பெருகிவரும் பிச்சை எடுக்கும் சிறார்கள்!

(வவுனியா)

வவுனியா நகரப் பகுதியில்- தற்போது அதிகளவிலான சிறுவர்கள் பிச்சையெடுப்பதில் ஈடுபட்டுள்ளதைக் காணமுடிகிறது.

சுமார் 20 இற்கும் மேற்பட்ட சிறுவர், சிறுமிகள் - மத்திய பேருந்து நிலையத்தில், காலை முதல் மாலை வரை ஒவ்வொரு பேருந்தாக ஏறியும், பஸ்தரிப்பிடத்தில் நிற்கும் மக்களிடமும் பிச்சை எடுத்துவருகின்றனர்.

இவர்கள் 6 வயது முதல் 14 வயதிற்குட்பட்டவர்களாகக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

சிறுவயதுப் பிள்ளைகளுடன் வரும் தாய்மார் சிலர், தாம் தனியாகவும், பிள்ளைகளைத் தனியாகவும் பிச்சையெடுக்க வைக்கின்றார்கள். இதேவேளை - இந்தச் சிறுவர்களில் பலர், அடிப்படைக் கல்வி வசதியின்றி அநாதரவான நிலையிலும் உள்ளனர் என்பதும் கவனிக்கத்தக்கது.

சிறுவர் துஷ்பிரயோகம் சம்பந்தமாகப் பேசிவரும் சிறுவர் அமைப்புகளும், பொது அமைப்புகளும் - இதுபோன்ற சிறுவர்களின் எதிர்காலத்தை இதுவரை கண்டுகொள்வதாக இல்லை என்பது வருந்தத்தக்க விடயம் என்று பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

(ரா)

## சாவகச்சேரி நீர் விநியோகத்துக்கு 12.5 மில்லியன் ரூபா ஒதுக்கீடு!

தென்மராட்சிப் பகுதியில் மேற்கொள்ளப்படும் அவசர நீர்விநியோகத் திட்டத்தின்கீழ், சாவகச்சேரி நகரசபைக்குட்பட்ட சாவகச்சேரி சந்தை நீர் விநியோகத் திட்டதிற்கு 11.18 மில்லியன் ரூபாவும், பொதுக் கிணறுகள் திருத்த வேலைக்கு 1.36 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி திட்டங்களுக்குரிய வேலைகளை ஆரம்பிப்பதற்கு ஏதுவாக, உரிய மதிப்பாய்வுத் திட்டங்களை உடன் தயாரித்து அனுப்புமாறு, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரீ.வி. கிருஷ்ணசாமி கேட்டுள்ளார்.

(29)

## நெடுந்தீவு வைத்தியசாலைக்கு சூரியமின்கலம், குளிரூட்டி வசதி!

நெடுந்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு, சுமார் 5 இலட்சம் ரூபா பெறுமதியான சூரியமின்கலமும், அதன் மூலம் இயங்கும் குளிரூட்டி ஒன்றும் யுனிசெப் நிறுவனத்தால் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

இதன்மூலம், யாழ்ப்பாணத்திலிருந்து எடுத்துவரப்படும் தடுப்பு மருந்துகளைச் சேமித்துவைத்து உரியவேளைகளில் அவற்றை நோயாளிகளுக்குப் பயன்படுத்தக் கூடியதாகவுள்ளது.

அத்துடன், இந்நிறுவனத்தின் உதவியுடனே - மேற்படி வைத்தியசாலைக்கு ஒரு நிரந்தர வைத்தியரை நியமித்தால், நோயாளிகள் யாழ்ப்பாணத்திற்குச் சென்றுவருவதற்கான சிரமங்கள் குறையும் எனவும் நெடுந்தீவு மக்கள் கோரியுள்ளனர்.

(113)

## மீளக்குடியேறியோருக்கான திட்டங்கள் நாளை தீவகத்தில் பூர்த்திவிழா!

மீளக்குடியேறிய மக்களுக்கு உதவுவதற்காக, 'கியூடெக்' நிறுவனத்தால் தீவகப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களை நிறைவு செய்யும் விழா, நாளை புதன்கிழமை மாலை 6 மணிக்கு அல்லைப்பிட்டி- பிலிப்பு நேரியார் ஆலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி திட்டத்தின்கீழ் - தீவுப்பகுதியில் 232 புதிய வீடுகளும், 25 தற்காலிகக் கொட்டகைகளும், 9 வீட்டுத் திருத்தவேலைகளும், 50 மலசலகூட திருத்தவேலைகளும் பிரான்ஸ அரசாங்க நிதியுதவியுடன் நிறைவுசெய்யப்பட்டுள்ளதுடன் - 50 பயனாளிகளுக்கு 2 ஆடுகள் வீதமும், 60 குடும்பங்களுக்கு மீன்பிடி உபகரணங்களும் வழங்கப்பட்டன.

# அமெரிக்க வாகன அணிகளின் மீது ஈராக்கில் தொடர்ந்தும் தாக்குதல்!

## 'பாலைவனத் தேள்' எதிர் நடவடிக்கையும் ஆரம்பம்



ஈராக்கில் அமெரிக்கப் படைகளின் வாகனத் தொடரணிகள் மீது நடத்தப்பட்ட ரொக்கட் தாக்குதலில், நான்கு படையினர் படுகாயமடைந்தனர்.

இருவேறிடங்களில் இத்தாக்குதல்கள் இடம்பெற்றன.

முதலாவது தாக்குதல் - அல்- முஸாஹிடா நகரில் நடைபெற்றது. இந்த நகரினூடாகச் சென்ற அமெரிக்கப்படைகளின் வாகனத் தொடரணியில் சென்ற பஸ்சொன்று - ரொக்கட் தாக்குதலுக்கு இலக்கானதில்- இரண்டு படையினர் படுகாயமடைந்தனர்.

மற்றுமொரு தாக்குதல் நேற்றுமுன்தினம் நடந்தது. அட் முஜாயல் என்ற பகுதியில், அமெரிக்க வாகன அணி மீது ஆர்.பி.ஜி கொண்டு தாக்கப்பட்டதில், மேலும் இருவர் காயமடைந்தனர்.

இத்தாக்குதல்களை சதாம் ஹுசைனின் ஆதரவாளர்களே நடத் தியதாக, அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை - 'பாலைவனத் தேள்'(Desert Scorpion) என்ற பெயரில் - சதாமின் அனுதாபிகள், ஆதரவாளர்களைத் தேடி அமெரிக்கப்படைகள் மேற்கொண்டு வரும் தாக்குதல்கள் தொடர்வதாகவும்-

இந்த நடவடிக்கை - போர் வழியிலும், மனிதாபிமான வழியிலும் முன்னெடுக்கப்படுவதாகவும் அமெரிக்கா அறிவித்துள்ளது.

இது இவ்வாறிருக்க - ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரான பஸ்ராவை மீண்டும் ஈராக்கியர்களின் நிர்வாகத்திற்கே தந்துவிடவேண்டுமென - அங்குள்ள நூற்றுக்கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டமொன்றை நேற்று நடத்தியிருக்கின்றனர்.

# ஹமாஸ் இயக்கத் தலைவர்களுடன் பேச்சுக்களை ஆரம்பித்தது எகிப்து!



அமெரிக்கா முன்னெடுத்துவரும் மத்திய கிழக்கிற்கான புதிய அமைதித் திட்டத்திற்கமைய நடப்பது பற்றி- ஹமாஸ் அமைப்பினருடன், எகிப்திய அதிகாரிகள் பேச்சு நடத்தியுள்ளனர்.

இஸ்ரேலியர்களுக்கு எதிரான தாக்குதல்களை இடைநிறுத்துமாறு எகிப்திய அதிகாரிகளால் - ஹமாஸ் தலைவர்களிடம் இதன்போது கேட்டுக்கொள்ளப்பட்டது.

ஆனால், இதற்கு உடனடியான பதில் எதனையும் ஹமாஸ் தெரிவிக்கவில்லை எனத் தெரியவருகிறது.

இதேவேளை - மத்தியகிழக்கிற்கான அமெரிக்காவின் விசேட தூதுவர் ஜோன் வூல்வ் - இஸ்ரேலிய உயர்தலைவர்களுடன் புதிய சுற்றுச் சந்திப்புக்களை நேற்று நடத்தினார்.

இந்தச் சந்திப்புக்கள் மூலமாக- இஸ்ரேலுக்கும் - பலஸ்தீனத்திற்கும் இடையிலான பதற்றமான சூழ்நிலையைத் தணிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை - மத்திய கிழக்கில் பன்னாட்டு அமைதிப் படையினரைச் சேவையில் ஈடுபடுத்த வேண்டுமென்ற கோரிக்கையும் வலுவடைந்து வருகின்றது.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷுக்கு மிக நெருக்கமான வட்டாரங்களும் இப்போது இந்தக் கோரிக்கையை வலியுறுத்த ஆரம்பித்துள்ளன.

# அணு மையங்கள் சோதனைக்கு ஈரான் மீண்டும் அனுமதி மறுப்பு!



(தெஹ்ரான்)

ஈரானிலுள்ள அணுவாயுத மையங்களைச் சோதனையிடுவதற்கு அனுமதியளிக்கவேண்டுமென - சர்வதேச அணுசக்தி ஏஜென்சியின் தலைவர் மொஹமட் எல்பிராடி கேட்டுள்ளார்.

வியன்னாவில் அணுசக்தி பற்றிய சர்வதேச மாநாடொன்றுக்குச் சென்றுள்ள அவர் - சர்வதேச அணுவாயுதக் கட்டுப்பாட்டு உடன்படிக்கையில் ஈரான் கையெழுத்திட வேண்டுமெனவும் வலியுறுத்தினார்.

ஆனால் - தாம் இந்தக் கோரிக்கைக்கு இணங்கப்போவதில்லை எனவும் - இந்தக் கோரிக்கை அரசியல் பின்னணியைக் கொண்டதெனவும் ஈரானிய அதிகாரிகள் பதிலளித்துள்ளனர்.

இதேவேளை - ஐரோப்பிய யூனியன் விடுத்த இதேமாதிரியான வேண்டுகோளையும் ஈரான் நிராகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## உலகவலம்

### அமைதிப்பணிக்கு ஈராக் வருமாறு இந்தியாவுக்கு அழைப்பு



ஈராக்கிற்கு அமைதிகாப்புப் பணிகளில் இந்தியப்படைகளையும் ஈடுபடுத்துவதற்கான முயற்சிகளில் அமெரிக்கா இறங்கியுள்ளது.

இதற்காக அமெரிக்காவின் உயர் இராணுவ அமைப்பான, பென்ரகனின் முக்கிய அதிகாரிகள் குழுவொன்று புதுடெல்கி சென்றுள்ளது.

ஆனால்- ஐ.நா.அழைத்தால் மட்டுமே- ஈராக்கிற்கு அமைதிகாப்புப் பணிக்காக இந்தியப்படையினர் செல்வார்கள் என இந்தியத்தரப்பு கருத்துத் தெரிவித்துள்ளது.

ஐ.நா. அமைப்புக்கு வெளியே, ஏனைய நாடுகளுடன் இணைந்து அமைதிகாப்புப் பணியில் ஈடுபடுவதில் பிரச்சினைகள் இருக்கின்றன என, இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்ணாண்டஸ் கூறியுள்ளார்.

அதேவேளை -

இந்தியத் தரப்புக்களைத் தாம் ஈராக்கில் சண்டையிட அழைக்கவில்லையென, இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதுவர் ரோபேட் பிளக்லில், வொஷிங்ரனில் வைத்து கிண்டல் தொனிக்கக் கூறியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

# லைபீரியத் தலைநகர் அருகே சண்டையின் தீவிரம் தணிந்தது!



லைபீரியாவில் கடந்த சில நாட்களாகத் தொடர்ந்த கடுமையான மோதல்களுக்குப் பின்னர், தற்போது இயல்புநிலை ஏற்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

லைபீரியாவின் தலைநகர் மீது போராளிகள் நடத்திய. தாக்குதல்கள் சற்றுத் தணிந்திருப்பதாலும், அரசபடைகள் தலைநகர் மொன்ரோவியாவைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்திருப்பதாலும் - அங்குள்ள கடைகளும் வேறு நிறுவனங்களும் நேற்று மீளத்திறக்கப்பட்டன.

ஆனாலும் - தலைநகரிலிருந்து வெளியேறிய பல்லாயிரக்கணக்கான மக்கள் இன்னமும் தனது சொந்த இடங்களுக்கு மீளத்திரும்பவில்லை.

இதேவேளை - கானா நாட்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ள லைபீரிய சமாதானப் பேச்சுக்களில் - நேற்று, போர்நிறுத்த ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்தாகும் என எதிர்பார்க்கப்பட்டபோதும் - அது நடைபெறவில்லை எனத் தெரியவருகிறது.

# படங்களும் செய்திகளும்



ஈராக்கில் அமெரிக்கப் படையினரால் கைதான சதாமின் ஆதரவாளர், விசாரணைக்கு அழைத்துச் செல்லப்படுகின்றார்.



ஈராக்கிலுள்ள பலாட் பகுதியில் - அமெரிக்கப் படையினரின் வாகன அணிமீது நடத்தப்பட்ட தாக்குதலில் - சேதமடைந்த வாகனமொன்றை, ஈராக்கியர் ஒருவர் பார்க்கின்றார்.



சீனாவிலுள்ள ரியான்ஜின் இராணுவ வைத்தியசாலையில் - இறுதியாகச் சிகிச்சை பெற்றுவந்த 'சார்ஸ்' நோயாளியும் பூரண குணமடைந்து வீடுசெல்வதை - வைத்தியர்கள் மகிழ்ச்சிபொங்க ஒருவரையொருவர் அணைத்துக் கொண்டாடுகின்றனர்.



மேற்குக்கரையிலுள்ள பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யசீர் அரபாத்தின் இல்லத்தில் - பலஸ்தீனப் பிரதமர் மஹ்மூட் அப்பாஸ், அரபாத்தை நேற்றுமுன்தினம் சந்தித்தார். புதிய சமாதானத் திட்டத்தில், அமெரிக்காவினால் அரபாத் ஒதுக்கப்பட்டிருக்கும் நிலையில் இச்சந்திப்பு நடந்தது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# தனியார் கல்வி நிறுவனங்களுக்கு புதிய நடைமுறைகள் அறிவிப்பு!

## இனி மாலை 6.30க்குப் பின் வகுப்புக்களில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டிலுள்ள தனியார் கல்வி நிறுவனங்களில் சீரான நடைமுறைகளைக் கொண்டுவருவதற்கு முடிவுசெய்யப்பட்டுள்ளது.

நேற்றுமாலை 3 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் மண்டபத்தில், யாழ். மாவட்ட தனியார் கல்வி நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஒன்றுகூடி மேற்படி முடிவை மேற்கொண்டிருக்கின்றனர்.

குடாநாட்டில், மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும்நோக்குடன்- சில நடைமுறைகளை அனைத்து தனியார் கல்வி நிறுவனங்களும் மேற்கொள்வது என்று இச்சந்திப்பில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

இதன்படி, அனைத்துத் தனியார் கல்வி நிறுவனங்களும் - காலை வகுப்புக்களை பழைய நேரம் 6 மணிக்கு முன்பதாகவும், மாலை வகுப்புக்களை பழைய நேரம் 6.30 மணிக்குப் பின்னரும் நடத்துவதில்லையெனவும்.

மாணவர்களுக்கான அனுமதிக் கட்டணம் ஐம்பது ரூபா மட்டுமே அறவீடு செய்வதெனவும் முடிவு செய்யப்பட்டது.

இந்தச் சந்திப்பில் - தமிழீழ கல்விக்கழகத் துணைப்பொறுப்பாளர் அருண் மாஸ்ரர், யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, யாழ். மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் எழிலன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## புலிகளின் அலுவலகத்தை...

விடுதலைப் புலிகளின் அரசியற்துறை உறுப்பினர்கள் தங்கியிருந்த வீட்டினுள் நுழைந்து தேடுதல் நடாத்துவதற்கு படையினர் முயற்சி செய்தனர்.

இதன்போது, படையினர் அவ் வீட்டு வாசலில் நின்று ஒரு தடவை துப்பாக்கிச் சூட்டையும் நடாத்தியுள்ளனர்.

எனினும், குறிப்பிட்ட வீட்டினுள் படையினரை நுழையவிடாது போராளிகள் தடுத்து நிறுத்தினர்.

அதனைத் தொடர்ந்து - அருகேயிருந்த வெறுமையான மற்றுமொரு வீட்டினுள் படையினர் தேடுதல் நடாத்தினர்.

இவ்விடயம் குறித்து, உடனடியாகக் கண்காணிப்புக்குழுவுக்கு தெரியப்படுத்தப்பட்டது.

காலை 7.00 மணியளவில் - கண்காணிப்புக்குழு அதிகாரிகள் அவ்விடத்துக்குச் சென்றனர்.

அதன்பின்னர் பொலிஸாரும், கண்காணிப்புக்குழுவும் - குறிப்பிட்ட வீட்டில் தேடுதல் நடாத்தினர். எனினும், அந்த வீட்டில் புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு விரோதமான பொருட்கள் எதுவும் காணப்படவில்லை.

வெறுமையாக இருந்த வீடும்- கண்காணிப்புக்குழு அதிகாரிகளால் பரிசோதிக்கப்பட்டது.

படையினரின் மேற்படி நடவடிக்கைகள் காரணமாக, அப்பகுதியில் பெரும் பதற்றநிலை தோன்றியிருந்தது.

(க)

## இராணுவத்தினரின் சோதனைகள்...

குழுத் தலைவர் முன்னிலையில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் - விடுதலைப் புலிகளின் தரப்பில், மட்டு - அம்பாறை சிறப்புத்தளபதி ரமேஷ், மட்டு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன், நிர்வாகப் பொறுப்பாளர் றெஜினோல்ட், கல்விப் பகுதி பொறுப்பாளர் வரதன் ஆகியோரும்

இராணுவத்தினரின் தரப்பில் - 23 ஆவது டிவிசன் கட்டளையதிகாரி பிரிகேடியர் ஏ.ஆர்.பாலசூரிய, 233 பிரிகேட் கட்டளையதிகாரி கேணல் ஜீ.பீ.ஆர்.டீ.சில்வா, எச்.கே.பீரிஸ் ஆகியோரும், பொலிஸ் சார்பில் கிழக்குப் பிராந்திய பதில் பொலிஸ் அத்தியட்சகர் என்.விஜயசிங்க, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எச்.வி.பி.எல்.டி.சில்வா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த சந்திப்பில் - அண்மைக்காலமாக மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டத்தில் இடம்பெற்று வரும் இருதரப்புக் கைதுகள் பற்றியும், அரச கட்டுப்பாட்டு பிரதேசங்களில் தமிழ் ஆயுதக்குழுக்கள் மீதான தாக்குதல் சம்பவங்கள் குறித்தும் ஆராயப் பட்டது.

தமிழ் ஆயுதக்குழுக்கள் மீதான தாக்குதல் சம்பவங்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லையென சிறப்புத் தளபதி ரமேஷ், படைத்தரப்பிடம் தெரிவித்தார்.

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் உறுப்பினர் சத்தியராஜை விடுதலை செய்ய வேண்டுமென்றும், இவர் விடுதலை செய்யப்பட்டாலேயே தம்மிடம் உள்ள இரு பொலிஸ் உத்தியோகத்தர்களை விடுதலை செய்யமுடியும் எனவும் ரமேஷ் குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகள் தரப்பில் முன்வைக்கப்பட்ட இக்கோரிக்கைக்கு எந்தவித முடிவும் எட்டப்படாது இந்தச் சந்திப்பு முடிவுற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

வேலையாள் தேவை
வேலையாட்கள் உடன் தேவை
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்
ரஹ்மான் ஹோட்டல்
226, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். (385)

இந்திய சாஸ்திரியார் வருகை
முதன்முறையாக யாழ்ப்பாணப் புண்ணியபூமிக்கு வருகை தந்துள்ளார். பரம்பரை ஜோதிடர்
புகழ்பெற்ற S.N.குமாரசாமி அவர்கள்
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, தொழில் முன்னேற்றமின்மை, கல்வித் தடையா?, குழந்தைப் பாக்கியம், தீராத வியாதியா? மற்றும் எந்தப் பிரச்சினைகளுக்கும் நேரில் சந்திக்கவும்.
(காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை)
ஸ்ரான்லி லொட்ஜ்
இல. 711, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P-077 6080660.(யாழ்.இந்துக் கல்லூரிக்கு அண்மையில்)
(கி-1088)

## கப்பல் தகர்ப்புப் பற்றி ஒஸ்ரின் - ரெலவ்சன் சந்தித்துப் பேச்சு

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ரெலவ்சனைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

நேற்றுக்காலை நடைபெற்ற இச் சந்திப்பின்போது, விடுதலைப் புலிகளின் கப்பல் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவம் குறித்து இருவரும் கலந்துரையாடியதாகத் தெரியவருகிறது. (01)

## சுபத்திரன் பூதவுடல் கொழும்புக்கு கொண்டுசெல்லப்பட்டது

அண்மையில் யாழ். நகரப்பகுதியிலுள்ள அவரது அலுவலக மேல் மாடியில் வைத்து சுட்டுக்கொலை செய்யப்பட்ட ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணியின் முக்கியஸ்தரான - தம்பிராசா சுபத்திரனின் பூதவுடல் இறுதிக் கிரியைகளுக்காக நேற்றுக் காலை கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

எதிர்வரும் வியாழக்கிழமை சுபத்திரனின் இறுதிச் சடங்குகள் கொழும்பில் நடைபெறுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

## நகரின்....

பின்னர், நேற்று அதிகாலை முதல் மாலை வரையும் - இருபகுதியினரும் பரஸ்பரம் மாறிமாறி தாக்குதல்களில் ஈடுபட்டனர். இத் தாக்குதல்கள் பரவலாக நடைபெற்றதனால் அப்பகுதிகளில் பதற்றநிலை காணப்பட்டது.

## நயினை....

நடைபெற்ற, நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய உற்சவ ஏற்பாடுகள் பற்றிய கூட்டத்தில் கலந்துகொண்ட கடற்படையதிகாரி, மேற்படி நடைமுறைகள் குறித்து அறிவித்தார்.

யாழ்.மேலதிக அரசாங்க அதிபர், பத்தினியம்மா திலகநாயகம் போல் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் - ஊர்காவற்துறை பிரதேச செயலர் நெடுந்தீவு, வேலணை உதவிப்பிரதேச செயலர்கள், நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

உற்சவ காலத்தில், பதினாறு படகுகளைச் சேவையில் ஈடுபடுத்தவும் - இறுதி நான்கு நாட்களிலும் அனலைதீவு, புங்குடுதீவு பகுதிகளுக்கான படகுகளை கூடுதலாகச் சேவையில் ஈடுபடுத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் - சேவையில் ஈடுபடும் படகுகள், கடற்படையினரால் வழங்கப்படும் தகுதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும், தகுதிப்பத்திரம் ஏற்றுக்கொண்ட பின்னரும், தொடர்ந்தும் படகின் தரத்தைப் பேணவேண்டும் என்றும், ஒவ்வொரு படகிலும் குறிப்பிட்ட எண்ணிக்கைக்கு மேற்பட்ட பயணிகளை ஏற்ற அனுமதிக்கப்படமாட்டாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# நெல்லியடி - மந்திகைப் பகுதியில் படையினரின் புதிய காவலரண்!

## நேற்றுமாலை திடீரென முளைத்தது

(வடமராட்சி)

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதானவீதியில் நெல்லியடிக்கு அண்மையில் இராணுவத்தினர் நேற்றுமாலை புதிதாக ஒரு காவலரணை அமைத்துள்ளனர். இப்பகுதியில் மேலும் பல காவலரண்களை அமைக்கும் முயற்சி மேற்கொள்ளப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

நேற்றுமாலை 5 மணியளவில், மந்திகை முதல் நெல்லியடி வரையான பிரதான வீதியில் திடீரென பெருமளவு இராணுவத்தினர் குவிக்கப்பட்டனர்.

கனரக வாகனங்களில் மண் மூட்டைகளும், காவலரண் அமைப்பதற்கான மரங்களும் எடுத்துவரப்பட்டன.

இதேவேளை - பவள் கவசவாகனங்களும், மோட்டார் சைக்கிள்கள் ரோந்துப் பிரிவினரும் இப்பகுதியில் நிறுத்தப்பட்டு இருந்ததையும் காணக்கூடியதாக இருந்தது. (09)

## கப்பலை...

சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இத்தாக்குதல் சம்பவத்தின் போது - உண்மையில் என்ன நடந்தது என்பது குறித்து அமைச்சர் இவர்களிடமிருந்து கேட்டு அறிந்து கொண்டதாகத் தெரியவருகிறது.(01)

## தப்பிச்சென்ற சிறிய கப்பலைத்...

இந்தியக் கடற்படை உத்தியோகபூர்வமற்ற வகையிலே பங்கேற்றது. இலங்கைக் கடற்படை கேட்டுக்கொண்டதற்கிணங்கவே இந்தியக் கடற்படை இதில் உதவியது.

புலிகளின் கப்பல் எங்கிருந்து வந்தது என்பதை இனங்காணவும், இந்தியாவே உதவியது எனக் குறிப்பிட்டார்.

இதனிடையே, புலிகளின் கப்பலுடன் காணப்பட்ட சிறிய கப்பல் தப்பிச்சென்றபோது - கடற்படையின் அதிவேக ஏவுகணைப் படகான நந்திமித்ரவின் மின் பிறப்பாக்கிகள் செயலிழந்த நிலையில் இருந்ததாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேலிடம் வாங்கப்பட்ட இந்த ஏவுகணைப் படகு, முக்கிய கட்டத்தில் பழுதடைந்ததாலேயே புலிகளின் சிறிய கப்பல் தப்பியதாகவும்- கடற்படைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

## நேரடித் தாக்குதல்களைத்...

கருத்துவெளியிடும்போதே - முன்னாள் தூதுவர் ஜே.என்.டிக்ஸிற் இவ்வாறு கூறினார்.

கடற்பகுதியில் பொதுவான கண்காணிப்பு விவகாரங்கள் பற்றியும், இலங்கையின் பாதுகாப்புச் சம்பந்தமான தகவல்களைத் தரும்முகமாகவும் இந்தியக் கடற்படை இலங்கைக் கடற்படைக்கு உதவி வழங்கி வருகின்றது என்றும், அவர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் கப்பல் இலங்கைக் கடற்பரப்பில் ஆயுதங்களைக் கொண்டுவருவதாக, இலங்கைக் கடற்படை கண்டுபிடித்ததைத் தொடர்ந்து, இந்தத் தாக்குதலை நடத்தி இருக்கலாம் என்று சந்தேகிக்கிறேன். மற்றப்படி, இந்தியக் கடற்படைக்கு நேரடித் தொடர்பு இருப்பதாகக் கருதவில்லை.

அதேநேரம், இலங்கையின் சமாதான முயற்சிகளிலும், இந்தியா - இராஜதந்திர ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் நேரடியாகத் தலையிடாது.

இலங்கை விடயத்தில், இந்தியா நேரடியாகத் தலையிட்ட கசப்பான அனுபவங்களை இன்னும் மறக்கவில்லை. இலங்கை விவகாரத்தில் மீண்டும் நேரடியாகத் தலையிட்டு தன்னைக் காயப்படுத்திக்கொள்ள இந்தியா தயாரில்லை என்றும் டிக்ஸிற் கூறினார்.

## இடைக்கால அமைப்புத்...

நிர்வாகம் சம்பந்தமாக இறுதித்தீர்மானம் எடுக்கப்படும்.

நாங்கள் பிரேரிக்க இருப்பது, சில அடிப்படை அம்சங்கள் கொண்ட யோசனைக்கான பொறிமுறையே தவிர, இறுதியான ஆவணமல்ல. அந்தக்கட்டத்தை அடைய சிறிது காலம் பிடிக்கும்.

வடக்கு - கிழக்கில் புனர்வாழ்வுக்கான தற்போதைய சிறான் அமைப்பு தோல்வியான திட்டமல்ல. இந்தத் திட்டத்துக்குப் பதிலாக புதிய வழிமுறையொன்றை வகுப்பது அவசியமாகும்.

வட - கிழக்கு மாகாணத்திற்கென, ஒன்று அல்லது இரண்டு ஆணையாளர்களை நியமிப்பதற்கு அரசாங்கம் பிரேரித்திருக்கிறது. அதைவிட ஒவ்வொரு மாவட்டத்திலும் அபிவிருத்திக்குழுக்களை அமைப்பது என்றும், உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாகவும் விடுதலைப் புலிகளோடு பேச்சுவார்த்தை நடத்துவது அவசியமானதாகும் என்றும் பீரிஸ் தெரிவித்தார்.

'சிறான்' அமைப்புக்குப் பதிலாக மாற்று ஏற்பாடு செய்யப்பட்ட பின்னரே இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் அங்கு மேலும் தெரிவித்தார். (01)






இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 17.06.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.